பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | மார்கழி 13 | வெள்ளிக்கிழமை 28.12.2018 | கதிர் 53

**இனிது ரகசியம் அல்ல!**

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பிக்களில் மூவருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளது என்ற தகவல் தென்னிலங்கை ஊடகங்களில் கொடி கட்டிப் பறக்கின்றது. யார் அந்த மூவர் என்று அறிவதற்காக ஆலாய்ப் பறக்கின்றனர் தெற்கு ஊடகவியலாளர்கள். நேற்று மட்டும் பக்கம் 02

# எந்தவொரு வழியிலாவது இந்த அரசை வீழ்த்துவோம்

## மஹிந்த தரப்பினர் சூளுரை



கொழும்பு, டிசெம்பர் 28

எந்த வழியிலாவது முயற்சித்து கிடைக்கும் முதல் சந்தர்ப்பத்திலேயே இந்த அரசை வீழ்த்திவிட்டுப் புதிய அரசை நிறுவுவோம்.

- இவ்வாறு சூளுரைத்துள்ளார் மஹிந்த தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸநாயக்க.

தேர்தல் ஒன்றின் மூலமோ அல்லது வேறு வழி முறைகள் மூலமோ அதனை மேற்கொள்வோம் என்றும் அவர் பக்கம் 11

# பிரதமர் – சபாநாயகர் இரகசியச் சந்திப்பு!

## சந்திப்பு முடிந்த கையோடு சுவிஸ் பறந்தார் கரு ஜயசூரிய



கொழும்பு, டிசெ. 28

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோருக்கிடையே நேற்று முன்தினம் புதன்கிழமை இரகசியச் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. பக்கம் 11

# கால்நடைகள் அழிவு

முல்லைத்தீவு, டிசெ. 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால், பெரும் தொகையான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. 1861 கால்நடைகளும், 4000க்கும் அதிகமான கோழிகளும் உயிரிழந்துள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் பெய்யும் தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள இடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் – முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை மற்றும் வெள்ள பக்கம் 11

# இடரால் பாதிப்புற்றோர் எண்ணிக்கை நேற்று ஒரு இலட்சத்தைத் தாண்டியது!

## கிளிநொச்சியில் மட்டும் 70 ஆயிரம் பேர் நிர்க்கதி

யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால், 36 ஆயிரத்து 594 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 458 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

3 ஆயிரத்து 258 குடும்பங்களைச் சேர்ந்த 10 ஆயிரத்து 424 பேர் இடர்பெயர்ந்து 32 இடைத்தங்கல் முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிகளவாக 70 ஆயிரத்து 650 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இன்று பக்கம் 11

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பொலிஸ் அதிகாரி படுகொலை!

கொழும்பு, டிசெ. 28

ஜாஎல, தெற்கு நிவந்தம பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரு குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாட்டின் காரண பக்கம் 11

# தெஹிவளையில் மீண்டும் பொலிஸ் பதிவு ஆரம்பம்

## தமிழருக்குச் சிங்களத்தில் விண்ணப்பப் படிவங்கள்

கொழும்பு, டிசெ. 28

பொலிஸ் பதிவுகளை மேற்கொள்வதற்காகத் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் சிங்கள மொழியில் காணப்படுவதால் மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். பக்கம் 11

# கிளிநொச்சியில் டெங்கு அபாயம்!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



கொழும்பு, டிசெ. 28

கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்கு நோய் திடீர் பரவல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் பக்கம் 11

# 'பிறவுண் ஐஸ்' போதைப்பொருள் வைத்திருந்த ஒருவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், டிசெ. 28

வட்டுக்கோட்டைப் பகுதியில் 'பிறவுண் ஐஸ்' என்ற போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில் பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 85 கிராம் பிறவுண் ஐஸ் எனப்படும் அதிசக்தி வாய்ந்த போதைப்பொருளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டார். பக்கம் 11



# அரசிலிருந்து வெளியேறும் மலையக மக்கள் முன்னணி?

கொழும்பு, டிசெ.28

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசிலிருந்து வெளியேறுவதற்கு மலையக மக்கள் முன்னணி பக்கம் 11

# ஐ.தே.க. மத்திய செயற்குழு கூட்டம் பிற்போடப்பட்டது

கொழும்பு, டிசெ. 28

ஐக்கிய தேசியக்கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெறவிருந்தநிலையில் அடுத்த வாரம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் வடக்கு பயணத்துக்கான ஏற்பாடுகள் உட்பட பக்கம் 02

# ரயில் முன் பாய்ந்து இளம் காதல் ஜோடி உயிரை மாய்ப்பு!



கொழும்பு, டிசெ. 28

அனுராதபுரம், புளியங்குளம் பகுதியில் 17 வயதுடைய இளைஞர் ஒருவரும், 14 வயதுடைய சிறுமி ஒருவரும் ரயில் முன் பாய்ந்து உயிர் பக்கம் 11

# வடக்கு அபிவிருத்தி அமைச்சை தந்தால் அரசுடன் இணைவேன்

## கூறுகின்றார் டக்ளஸ் தேவானந்தா



யாழ்ப்பாணம், டிசெ. 28

வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்ற அமைச்சை மீள வழங்கினால் தேசிய அரசில் இணைவதற்குத் தயார் எனத் தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.

இந்த அமைச் பக்கம் 11

# இரணைமடுக் குளத்தின் புனரைமைப்பில் ஊழல்

## டக்ளஸ் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 28

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் புனரமைப்பில் இடம்பெற்ற ஊழலே அங்கு தற்போது இந்தப் பாரிய வெள்ள இடர் ஏற்படக் காரணமாக இருந்துள்ளது எனக் குற்றம்சாட்டியுள்ள ஈ.பி.டி.பி. இந்த பக்கம் 02

# கிளிநொச்சிக்கு இன்று வருகின்றார் பிரதமர்!

## வெள்ளப் பாதிப்புகளை பார்வையிடுவதற்கு



யாழ்ப்பாணம், டிசெ,. 28

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் குறித்துப் பார்வையிடுவதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று வெள்ளிக்கிழமை வருகை தரவுள்ளமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் உறுதிப்படுத்தினார்.

பிரதமரின் வருகையையடுத்து வெள்ள இடரால் ஏற்பட்ட சேத விவரங்கள் தற்போது தீவிர கதியில் திரட்டப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 21ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தனர்.

வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. வீட்டிலிருந்த உடைமைகளைக் கைவிட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள்.

இந்த இடர் காரணமாக வீடுகள், வீட்டு உடைமைகள், வயல்கள், வீதிகள், பாலங்கள் என்று பல்வேறு வகையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கால்நடைகள் உயிரிழந்தும் காணாமலும் போயுள்ளன.

இடர் ஏற்பட்டு 5 நாள்கள் ஆகின்ற நிலையில் சேதவிவரங்கள் திணைக்களங்களால் முழுமையாக இன்னமும் கணக்கெடுக்கப்படவில்லை. திணைக்களங்களிடமிருந்து உரிய விவரங்கள் தமது கைக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கும் மாவட்ட செயலக வட்டாரத்தினர், இன்று வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சிக்கு வருகை தருவதற்கு முன்னதாக அந்த விவரங்கள் திரட்டப்படும் என்று தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்களுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பும் இன்று நடைபெறவுள்ளது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர்.

# கிழக்கில் இராணுவத்தினர் காணிகளை விடுவித்தனர்

மட்டக்களப்பு, டிசெ. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பகுதிகளில் இராணுவத்தினர் வசமிருந்த 8.5 ஏக்கர் காணிகள் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டன. காணிகளுக்கான ஆவணங்களை கையளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கிணங்க ஜனாதிபதி செயலணியினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினர் பயன்படுத்தி வந்த 8.5 ஏக்கர் காணி நேற்று விடுவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், மண்முனைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 2.5 ஏக்கரும், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஓந்தாச்சி மடத்தில் 0.5 ஏக்கரும், பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொக்கட்டிச்சோலையில் 0.75 ஏக்கரும் வெலிக்கந்த பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தோணி தாண்டமடுவில் 5 ஏக்கர் காணியும் விடுவிக்கப்பட்டுள்ளன. இதில் 5 ஏக்கர் மகாவலிக்குட்பட்ட அரச காணியும், 3.5 ஏக்கர் பொது மக்களின் காணியுமாகும்.

இக்காணிகளுக்கான ஆவணங்கள் கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கபில அநுர ஜயசேகரவினால் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகமவிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இதையடுத்து கையளிக்கப்பட்ட ஆவணங்களை ஆளுநர் ரோஹித போகொல்லாகம, மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி சிறீகாந்தியிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன், மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராஜா சரவணபவன், கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர் மற்றும் திணைக்கள தலைவர்கள், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் இராணுவ பொலிஸ் உயரதிகாரிகள், சமயத் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# நல்லிணக்க முயற்சிகளுக்கு பொதுநலவாயமும் ஆதரவு!

கொழும்பு, டிசெ. 20

இலங்கையில் நல்லிணக்க நடவடிக்கைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கத் தயார் என பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் பட்ரிசியா ஸ்கொட்லான்ட் இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுகு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்

இலங்கையில் அரசியல் நெருக்கடி முடிவுக்கு வந்ததையும் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டமையையும் அவர் வரவேற்றுள்ளார். இலங்கையில் சட்டத்தின் ஆட்சி, அரசமைப்பு, கட்டமைப்பு ஆகியவற்றைப் பாதுகாப்பதில் காண்பித்த உறுதிப்பாட்டிற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் ஏனையவர்களையும் அவர் பாராட்டியுள்ளார். (ஐ)

# கடந்த 8 மாதத்துக்குள் 320 படுகொலைகள்!

கொழும்பு, டிசெ. 28

நாட்டில் கடந்த 8 மாத காலப் பகுதிக்குள் 320 மனிதப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளன எனவும் அதில் 200 பாதாள உலக குழுக்களினாலும், ஏனையவை குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுக்களினாலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுதவிர, ஆயுத முனையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் 252 பதிவாகியுள்ளன எனவும் அந்தத் தகவல்கள் குறிப்பிட்டன.

இந்தக் குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 335 துப்பாக்கிகள் பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டுள்ளன. இதில் அதிகமானவை ரி. 56 ரக துப்பாக்கிகள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்கள் மற்றும் வடக்கிலுள்ள பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குழுவினர் ஊடாக தெற்கில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு ஆயுதம் விநியோகிக்கப்படுவதாகப் பொலிஸ் உயர்மட்டத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளக என அந்தத் தகவல்கள் மேலும் கூறின. (ஐ)

### இரணைமடுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடர் தொடர்பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இரணைமடுக் குளப் புனரமைப்பில் 5 ஆயிரம் மில்லியன் தொடக்கம் 7 ஆயிரம் மில்லியன் ரூபா வரையிலான பணம் செலவு செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் இடம்பெற்ற ஊழலுக்கு வடக்கு மாகாண சபையே பொறுப்பேற்கவேண்டும் அது கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

கிளிநொச்சி, முல்லைதீவு ஆகிய பிரதேசங்களில் தற்போது ஏற்பட்ட வெள்ள இடரால் பாரியளவு சேதம் ஏற்பட்டுள்ளது. இயற்கையின் அழிவுகளத் தடுக்க முடியாவிட்டாலும் அதன் அழிவுகளைக் குறைத்திருக்க முடியும். அரசியல் தலைமைகளது சரியான நெறிப்படுத்தல்கள் இல்லாமையால் யுத்தப் பாதிப்புக்குள்ளான மக்கள் மீளவும் பாதிப்படைந்துள்ளார்கள்.

குறிப்பாக இரணைமடுக் குளத்தின் நீரை யாழ்ப்பாணத்துக்குத் தரமாட்டோம் எனக் கூறித் தற்போது அந்தப் பகுதி மக்களையே அழித்துள்ளார்கள். நாம் இரணைமடுவின் நீரைக் கேட்டது கிளிநொச்சி மக்களின் வயிற்றில் அடிப்பதற்கு அல்ல. மாறாக அங்கு மேலதிகமாக உள்ள நீரையே எமக்குத் தருமாறு கோரியிருந்தோம்.

இரணைமடுக் குளத்தின் புனரமைப்பில் பாரிய ஊழல் இடம்பெற்றுள்ளது. குறிப்பாகக் குளத்தின் கீழ் வாய்க்கால் புனரமைப்பில் இடம்பெற்ற ஊழலே இந்த இடருக்குக் காரணம். தாம் செய்த ஊழல்கள் வெளியே தெரிந்துவிடும் என்பதற்காகவே அதிகமான நீரைச் சேமித்து வைத்து இந்தப் பாரிய அனர்த்தம் ஏற்பட சிலர் காரணமாகியிருக்கிறார்கள்.

இந்தக் குளத்தின் வான் கதவுகள் மின்சாரத்தில் திறக்கும் படியாக செய்யப்பட்டுள்ளன. ஆனால் அன்றைய தினம் அவை செயற்படவில்லை. பின்னர் கைகளாலேயே அவை திறக்கப்பட்டன. அத்துடன் அவற்றில் பல வான் கதவுகள் திறக்கப்படவுமில்லை, திறக்கப்பட்ட வான் கதவுகளும் சரியான நேரத்தில் திறக்கப்படவில்லை. இதன் காரணமாகவே இந்த இடர் ஏற்பட்டது.

இந்தக் குளத்தின் புனரமைப்பில் சுமார் 5 ஆயிரம் மில்லியன் தொடக்கம் 7 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்ற ஊழலுக்கு வடக்கு மாகாண சபையே பொறுப்பேற்க வேண்டும். அப் பிரதேச மக்கள் பிரதிநிதிகள் இதனை அவதானித்திருந்தால் இத்தகைய ஊழல் இடம்பெற்றிருக்காது – என்றார். (ஐ–07)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனக்கு நான்கு தொலைபேசி அழைப்புகள். வெவ்வேறு ஊடகவியலாளர் களிடமிருந்து. இவ்விடயம் பற்றிய விசாரிப்புடன்.

எனக்குத் தெரியவே தெரியாது என்றேன். அவர்கள் நம்புகின்ற மாதிரி இல்லை.

ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவரைப் பற்றி உங்களுக்கு ஆதியோடு அந்தம் நன்கு தெரியும், அவருக்கு இரட்டை பிரஜாவுரிமை உண்டாமே...! என்று கேட்டார் ஒருவர்.

சத்தியமாக அவருக்கு இரட்டைப் பிரஜாவுரிமை இல்லை என்றேன்.

அப்படியானால், அந்த மூன்று பேர் யார் என்று என்னிடம் கேள்வி எழுப்பினார் அவர்.

தென்னிலங்கை ஊடகங்கள் தான் இந்தச் செய்தியை வெளியிட்டன. அவற்றிடம் விசாரித்து எங்களுக்கும் தகவல் தாருங்கள் என்றேன்.

அண்மையில் கூட்டமைப்பை விட்டுக் குத்துக்கரணம் அடித்த வியாழேந்திரனுக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை உண்டாமே என்று மற்றொரு ஊடகவியலாளர் என்னை நோண்டினார்.

*“எனக்கு தெரியது. ஆனால் எம்.பியாவதற்கு முன்னர் சில காலம் அவர் வெளி நாட்டில் இருந்தவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஏன் அவரிடமே நேரில் கேட்டுப் பார்த்து உறுதி செய்து கொள்ளுங்களேன்!”* – என்றேன்.

இன்னொரு கூத்தும் நடந்தது. தென்னிலங்கை ஊடகவியலாளர்களுடன் அதிகம் பழகும் வடக்குக் கூட்டமைப்பு எம்.பி. ஒருவருக்கு சிங்கள ஊடக நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

*“இரட்டை பிரஜாவுரிமை வைத்திருக்கும் அந்தக் கூட்டமைப்பு எம்.பிக்கள் மூவரும் யார்?”* – என்று நேரடியாகக் கேட்டார் அவர்.

*“நானும் ஒருவன். எனக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை உண்டு.”* – என சடாரெனப் பதில் தந்தார் அந்த வடக்கு எம்.பி.

அந்தத் தெற்கு ஊடகவியலாளருக்கோ மெத்தச் சந்தோஷம். ஓர் ‘எக்ஸ்குளூசீவ்’ செய்தி சிக்கிவிட்ட மகிழ்ச்சி.

*“எந்த நாடு? எந்த நாடு அது? நீங்கள் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்ற அந்த மற்ற நாடு எது?”* – என்று விழுந்தடித்துக் கொண்டு விரைந்து கேள்வி எழுப்பினார் நமது சிங்கள ஊடகவியலாளர் நண்பர்.

நமது வடபகுதி எம்.பி. மிகவும் சாவகாசமாக சிரித்துக் கொண்டு பதில் தந்தார்.

*“அதுவா...? ஒன்று சிறிலங்கா. மற்றது தமிழீழம். தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தான் எனக்கு தமிழீழப் பிரஜாவுரிமையைத் தந்தவர்.”* – என்றார் அந்த எம்.பி.

நொந்து போனார் அந்த ஊடகவியலாளர்.

*“அப்படிப் பார்த்தால் உங்களில் மூன்று பேருக்கு அல்ல, கூட்டமைப்பில் தெரிவான பதினாறு எம்.பிக்களுக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை உண்டு.”* – என்று முணுமுணுத்தபடி தொலைபேசியை சடாரெனக் ‘கட்’ செய்தாராம் அந்த ஊடக நண்பர்.

இருபத்தி நான்கு கரட் சுத்தத் தங்கம் மாதிரி கலப்பேயில்லாத தூய அரசியல் நடத்துபவர்கள் நாங்கள் மட்டுமே என்று கூறும் சைக்கிள்காரத் தம்பியின் ‘இரு தேசம், ஒரு நாடு’ கொள்கைப்படி நாங்கள் ஈழத்தமிழர் ஒவ்வொருவரும் இரட்டைப் பிரஜாவுரிமை உடையவர்கள் தானே...? அப்படிக் கூறுவது தப்பில்லைத் தானே...?

**- மின்னல் -**

### ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் சில காரணங்களாலேயே தீடீரெனக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக ஐ.தே.க. எம்.பியொருவர் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் விசேட மத்திய செயற்குழுக் கட்சித் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறிகொத்தவில் நேற்று மாலை நடைபெறவிருந்தது. இதன் போது முக்கிய சில தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருந்தன.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் தற்போது கூட்டணியாக இயங்கும் ஐக்கிய தேசிய முன்னணியை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு மத்திய செயற்குழு கடந்த வெள்ளியன்று அனுமதி வழங்கியது.

இதன்படி புதிய அரசியல் கூட்டணியை, ‘தேசிய ஜனநாயக முன்னணி’ என்ற பெயரில் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது இன்று இறுதி முடிவெடுக்கப்பட விருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும், 2019 ஜனவரி முதல் வாரத்தில் மத்திய செயற்குழு கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நேருக்கு நேர் மோதிய ரிப்பர் ரக வானகங்கள்

## மூவர் கிளிநொச்சி வைத்தியசாலையில்





கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் இரண்டு ரிப்பர் ரக வாகனங்கள் நேருக்கு நேர் மோதியதில் இரண்டு சாரதிகள் உட்பட மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்னாள் உள்ள பஸ் தரிப்பிடத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெற்ற இந்த விபத்தில் இரண்டு ரிப்பர் சாரதிகளும் வீதியில் சென்றுகொண்டிருந்த சிறுமி ஒருவரும் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்னாள் உள்ள தரிப்பிடத்தில் பயணிகளை இறக்குவதற்கு நிறுத்தியபோது அதனை முந்திச் செல்ல முற்பட்ட ரிப்பர் வாகனமும் வவுனியா திசையிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த ரிப்பர் வாகனமும் நேருக்கு நேர் மோதியமையால் இந்த விபத்து இடம்பெற்றது.

வவுனியாவில் இருந்து கிரவல் மண்ணுடன் வந்த ரிப்பர் தடம் புரண்டுள்ளது. வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரிப்பரின் பெட்டி உடைந்துள்ளது. தரிப்பிடத்தில் நின்ற தனியார் பஸ்ஸும் சேதமடைந்துள்ளது . இனால் சில நிமிடங்கள் ஏ-9 பிரதான வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. (ஐ -100)

# வவுனியாவில் நேற்று கடும் பனிமூட்டம்



வவுனியா, டிசெ. 28

வவுனியாவில் கடந்த சில நாட்களாகக் கடும் மழை பெய்து வந்த நிலையில் நேற்றுக் காலை கடும் பனிமூட்டம் ஏற்பட்டது.

வவுனியாவில் கடந்த 5 நாட்களாகத் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை காணப்பட்ட நிலையில் நேற்றுக் காலை 9 மணிவரை கடும் பனிமூட்டம் காணப்பட்டது.

எதிரே உள்ள காட்சிகளை அடையாளம் காண முடியாத அளவுக்கு காலையில் கடுமையான பனிப் பொழிவு காணப்படுகின்றது. இதனால் வீதியில் செல்லும் வாகனங்கள் ஒளியைப் பாய்ச்சியபடி செல்வதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஏ- 9 வீதியில் பயணிக்கும் வாகனச் சாரதிகளும் பனிமூட்டத்தால் அவதிக்குள்ளாகினர்.

அதிகாலையில் நிலவும் கடுமையான பனிமூட்டம் காரணமாக குளிரான காலநிலை நிலவுவதால் மக்கள் பெரும் சிரமத்திற்கு முகங்கொடுத்துள்ளதோடு இயல்புநிலை பாதிப்படைந்துள்ளது. (ஐ -100)

# தொல்லியல், வனவளத் திணைக்களங்களின் அடாவடியை உடன் தடுக்க முன்வாருங்கள்!

## கூட்டமைப்பின் எம்.பிக்களிடமும் வடக்கு அவைத் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 28

தமிழர் தாயகப் பிரதேசங்களில் வன வளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டு வரும் அடாவடித்தனமான செயற்பாடுகளை உடனடியாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 எம்.பிக்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம்.


இது தொடர்பாக அவர் 14 எம்.பிக்களுக்கும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: -

கடந்த பல காலமாக வடக்கு மாகாண சபையால் சுட்டிக்காட்டப்பட்டதும், நிர்வாக ரீதியாகத் தீர்க்கப்படக்கூடியதுமான பின்வரும் விடயங்களில் முன்னுரிமை வழங்கி முன்னெடுக்குமாறு அன்புடன் வேண்டு கின்றோம்.

1. தொல்லியல் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாடுகள் வட மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக வன்னி பெரு நிலபரப்பில் இடம் பெறுவ தால் மத ரீதியான முரண்பாடுகள் ஏற்படுத்தப்படுகின்றன.

எங்கெங்கே மலைப்பகுதி காணப்படு கின்றதோ அங்கெல்லாம் பௌத்த ஆலயங்களை அடாத்தாக அமைக்கும் முயற்சிகளில் ஈடுபடுவது ஒருபுறமும் தமி



ழர்களின் பாரம்பரிய இந்து ஆலயப் பிரதேசங்களைப் பௌத்த பிரதேசங்களாக மாற்றுவதும் அவற்றின் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்வதுமாகவே இந்தத் திணைக்களத்தின் செயற்பாடுகள் உள்ளன.

உதாரணமாக வவுனியா வடக்குப் பிரதேச செயலர் பகுதியில் உள்ள வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்துக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகள் பற்றி குறிப்பிடலாம். மலை உச்சியில் அமைந்துள்ள ஆதிசிவலிங்க ஆலயத்தைத் தரிசிப்பதற்குச் செல்வதற்கென அதன் நிர்வாக சபையால் அமைக்கப்பட்ட உருக்கு கம்பி ஏணியை பொருத்துவதற்கு பொலிஸார் மூலம் அச்சுறுத்தித் தடை ஏற்படுவதுடன் குழாய்க் கிணறு அமைப்பதையும் தடை செய்துள்ளனர். இந்தத் தடைகள் உடனடியாக நீக்கப்படல் வேண்டும் .

2.வன பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் என்பன தான்தோன்றித்தனமாகப் பல பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி எமது மக்களின் வாழ்வாதார முயற்சிகளுக்கு இடையூறாகச் செயற்படுகின்றன.

3. இந்த மூன்று திணைக்களங்களும் பெரும்பான்மை இனத்தவரையே உயர் அதிகாரிகளாகக் கொண்டுள்ளதால் தமிழ் மக்களின் வரலாறு மற்றும் உணர்வுகள் கணக்கில் எடுக்கப்படாது புறக்கணிக்கப்பட்டே வருகின்றன.

எனவே இந்தத் திணைக்களங்களின் இரண்டாம் நிலை உயர் அதிகாரி கட்டாயமாக ஒரு தமிழராக இருப்பது உறுதி செய் யப்படுதல் வேண்டும்.

தொல்பொருளியல் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எந்த ஒரு இடத்தையும் தொல்லியல் ஒதுக்குப் பிரதேசமாக பிரகடனப்படுத்துவதற்கு அல்லது தலையிடுவதற்கு முன்பு அந் தந்த பிரதேச செயலகத்தில் சேவையாற்றும் கலாசார உத்தியோகத்தர் மூலம் மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளரின் ஒத்திசைவைப் பெற்றுக் கொள்வது அவசியமானது.

4.இவற்றை அரசின் நிர்வாகப் பணிப் புரைகள் மூலம் நிறைவேற்ற முடியும் என்பதால் அவற்றிற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம் – என்றுள்ளது. (ஐ)

# வெள்ளநீர் கலந்த கிணறுகளை துப்புரவு செய்யும் படையினர்

கிளிநொச்சி, டிசெ. 28

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடர் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல கிணறுகள் வெள்ளத்தினால் மூடப்பட்டு காணப்பட்டன. இதனால் சுகாதாரமான நீரைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் வெள்ள நீர் கலந்த கிணறுகளைத் துப்புரவு செய்யும் பணியில் கிளிநொச்சியில் உள்ள படையினர் ஈடுபட்டுள்ளனர்

நேற்றுப் படையினரும், கடற்படையினரும் இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் வெள்ள நீர் கலந்த மக்கள் பாவணை கிணறுகளைத் துப்புரவு



செய்யம் பணிகளில் காலை முதல் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய முப்படையினரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவிகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# பொலிஸாருக்கு எதிராக தினமும் 50 முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 28

பொலிஸ் அதிகாரி கள் மற்றும் பொலிஸுக்கு எதிராக, நாளாந்தம் ஆகக் குறைந்தது 50 முறைப்பாடுகள் கிடைக்கின்றன எனத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த வருடத்தின் இதுவரையிலான காலப் பகுதிக்குள் மட்டும், அவ்வாறான முறைப்பாடுகள் 600 இக்கும் அதிகமாகக் கிடைத்துள்ளன என்று ஆணைக்குழுவின் தவிசாளர் ஜி. எச்.மனத்துங்க தெரிவித்தார். (ஐ)

# வெளிநாட்டுக் குடியுரிமையை கைவிட கூட்டமைப்பு எம்.பிக்கள் மூவர் முடிவு?

கொழும்பு, டிசெ. 28

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது வெளிநாட்டுக் குடியுரிமையை விரைவில் கைவிடவுள்ளனர் என்று, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர் ஒருவரை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருந்ததால், கீதா குமாரசிங்கவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதியிழப்புச் செய்து உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கிறார்கள் எனவும், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன எச்சரித்திருந்தது.

எனினும் அவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்தநிலையிலேயே, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காகக் கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது வெளிநாட்டுக் குடியுரிமையை அடுத்த ஆண்டு தொடக்கத்தில் கைவிடவுள்ளனர் என்று, கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இனப் பதற்றத்துக்கு தூபம்

**இந்தத் தீவில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற விளையும் தென்னிலங்கைத் தரப்புகள் அதற்கான பிரதான தந்திரோபாயமாகப் பற்றிக் கொள்வது இனவாதத்தைத்தான்.**

**இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பெரும் இரத்தப் பிரளயமான உள்நாட்டு யுத்தமாக வெடித்தமைக்கும், அது ஏழு தசாப்த காலம் கடந்தும் தீர்க்கப்படாமல் நிரந்தரத் தலையிடியாக நீடிப்பதற்கும் முக்கிய அடிப்படை இதுதான். ஆட்சி அதிகாரத்துக்காக இனவாதத்தைத் தூண்டிவிட்டு அந்தப் பேரினவாதத் தீயில் அரசியல் குளிர் காய எத்தனிக்கும் தரப்புகளே இந்த நாட்டில் இணக்கமான – புரிந்துணர்வுடன் கூடிய – ஒரு சுமூகத் தீர்வு எட்டப்படமுடியாமல் இழுபடுகின்றமைக்குக் காரணம்.**

**கடந்த ஒக்டோபர் 26ஆம் திகதி சத்தம், சந்தடியின்றி அதிகாரக் கைப்பற்றலுக்கான சூழ்ச்சித் திட்டம் ஒன்று இந்த நாட்டில் அரங்கேறியது.**

**ஜனநாயக விரோதமுறையில், ஜனாதிபதி தமக்கு இருந்த நிறைவேற்று அதிகாரத்தின் கட்டுமட்டுக் குறித்து அறியாமல் – அதை எல்லை மீறிப் பயன்படுத்தி – அந்த அரசியல் சூழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்தார் என்பது இப்போது நாடறிந்த பரகசியம்.**

**அந்த ஆட்சி மாற்றத்தை – ஜனநாயக விரோதமாகவும், சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் முரணாகவும் முன்னெடுக்கப்பட்ட அந்த அரசியல் எதேச்சாதிகார முயற்சியை – முறியடிப்பதற்காக, இந்தத் தீவின் சிறுபான்மை இன மக்களின் பிரதான கட்சிகள் எல்லாம் ஒன்றுபட்டு, உறுதியோடு, திடமாக எழுந்து நின்றன.**

**அதன் காரணமான அந்த அரசியல் சூழ்ச்சித் திட்டம் தவிடுபொடியானது.**

**இந்தத் தடவை இலங்கையில் சர்வாதிகாரமும், எதேச்சாதிகாரமும் ஜனநாயகத்தை மழுங்கடித்து வீழ்த்துவதற்கு எடுத்த பெரும் முயற்சியை முறியடித்த பெருமை இந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் தலைவர்களையே சேரும்.**

**வடக்கு, கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் என மூவின மக்களின் தலைவர்களும் இவ்விடயத்தில் அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதை நிரூபித்தனர்.**

**அரசியல் சூழ்ச்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்ற முயன்ற பேரினவாதத் தரப்புகள் தங்களின் அந்த முயற்சி தங்களுக்கு அவமானத்தையும், அவப் பெயரையும் வாங்கித்தரும் வகையில் முறியடிக்கப்பட்டமைக்குப் பிரதான சூத்திரதாரிகள் சிறுபான்மை இன அரசியல் தலைவர்களின் வீட்டுக்குக் கொடாத – வளைந்து கொடாத – கொள்கை உறுதியே என்றுணர்ந்து, அவர்கள் மேல் சீற்றம் கொண்டிருக்கின்றனர் என்பதும் துலாம்பரமானது.**

**இலங்கையில் அரசியல் அதிகாரப் பீடத்தைத் தெரிவு செய்வதில் இதுவரை காலமும் காத்திரமாகவும் உறுதியாகவும் செல்வாக்குச் செலுத்தி வந்த பேரினவாத மேலாதிக்கப் போக்கும், பௌத்த – சிங்கள மேலாண்மை அதிகாரமும் இந்தத் தடவை பலனளிக்காமல் போனமையும் –**

**ஒற்றுமைப்பட்டு நின்ற சிறுபான்மை மக்களின் உறுதியான நிலைப்பாடே அரசியல் அதிகாரத்தைத் தீர்மானிக்கும் பிரதான அம்சமாக மாறியிருந்தமையும் –**

**தென்னிலங்கை பௌத்த – சிங்கள பேரினவாதிகளை பெரும் சஞ்சலத்துக்குள்ளும் எரிச்சலுக்குள்ளும் ஆழ்த்திவிட்டன என்பது தோற்றத் தொடங்கியுள்ளது.**

**இலங்கை ஆட்சித் தரப்பு மீதான தனது அதிகாரப் பிடியை மீண்டும் வலிதாக்குவதற்காக அத்தரப்புகள் திரும்பவும் வீறு கொண்டு எழும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயமாக இருந்து வந்தது.**

**அதன் சாயலே இப்போது மீண்டும் இனப்பதற்றமாக உருவெடுக்கத் தொடங்கியிருக்கின்றது.**

**மாவனல்லவில் புத்தர் சிலை சேதப்படுத்தப்பட்ட சம்பவம் என்ற பெயரோடு இன வன்முறைக்கான தூபம் போடப்பட்டிருப்பதாகவே நாம் உணர்கிறோம்.**

**ஆட்சித் தரப்பைத் தீர்மானிப்பதில் சிறுபான்மை மக்கள் ஆதிக்கம் பெற்றிருக்கும் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ளவே விரும்பாத பேரினவாதமானது, இந்தப் போக்கு 'தேசிய நலனுக்கு' பேராபத்தானது என்ற சரப்பட உணர்வெழுச்சிப் பிரசாரங்களை தென்னிலங்கையின் மூலை, முடுக்கெங்கும் ஆரம்பித்திருக்கின்றது. சிறுபான்மையினருக்கு எதிரான காழ்ப்புணர்வை, அவர்களுக்கு விரோதமான திண்ணியமான சமூக, பொருளாதார ஒடுக்கு முறைக்குத் தூண்டும் – தூபமிடும் – வாய்ப்பாக இந்தச் சக்திகள் பயன்படுத்த முயலுகின்றன.**

**அரசியல் அதிகாரப் போட்டியை இனப்பகைமைக்கான அத்திபாரமாக மாற்றி, அந்த ஒடுக்கு முறைக் குரோதத்தினால் எழும் இனவன்முறை மூலம் மீண்டும் ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கும் சக்திகளாகத் தாங்கள் மீளுயிர்ப்புப் பெறலாம் என அவை சதித் திட்டமிடுகின்றன. அதன் விளைவாக நாடு மீண்டும் இனவன்முறைக்குள் மூழ்கிடும் ஆபத்து உண்டு.**

**அதற்கான முன்னெச்சரிக்கை மணிதான் மாவனல்ல புத்தர் சிலை உடைப்பை அடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள இனப் பதற்றம்!**

# கரியாலை நாகபடுவான் குளம் வான் பாய்ந்து மக்கள் குடியிருப்புக்குள் புகுந்தது வெள்ளம்!



### சிறிதரன் எம்.பி. களத்தில்.

கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரியாலை நாகபடுவான் பண்டிவெட்டிக் குளம் வான் பாய்ந்து மக்கள் குடியிருப்புக்களுக்குள் வெள்ளம் புகுந்துள்ளமையால் பெருமளவான மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளார்கள்.

இதனை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞனம் சிறீதரன் நேற்று அங்கு சென்று மக்களுடன் கலந்துரையாடி நிலைமைகளை ஆராய்ந்து மக்களுக்கான உடனடி உதவிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகக் கன மழைவெள்ளப்பெருக்கு ஏற்பட்டு குளங்களின் நீர் வரத்து அதிகரித்து குளங்கள் நிரம்பி வான் பாய்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த கரியாலைநாகபடுவான் பண்டிவெட்டிக் குளமும் நீர் வரத்து அதிகரித்து வான் பாய்கின்றது. குளத்திலிருந்து பெருமளவு நீர் வெளியேறுகின்றமையால் மக்கள் குடியிருப்புக்களுக்குள் வெள்ள நீர் புகுந்து மக்களின் தற்காலிக வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளார்கள்.

மேற்படி கரியாலைநாகபடுவான் பண்டிவெட்டிக் குளம் வான் பாய்கின்றமையால் ஜெயபுரம் தும்புறுவில் கிராமம் ஏற்கனவே யுத்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் இதுவரை நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்கப்படாதமையால் தற்காலிகக் கொட்டகைகளில் வசித்து வந்த 50 குடும்பங்களின் இருப்பிடங்களுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. தற்காலிக வீடொன்றின் மீது பாரிய மரம் பாறி விழுந்துள்ளமையால் வீடு முற்றுமுழுதாகச் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக மேற்படி 50 குடும்பங்களும் இடம்பெயர்ந்து ஜெயபுரம் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளன.

இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அவ்விடத்திற்கு நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடி நிலைமைகளை அவதானித்து மக்களுக்கு வேண்டிய உடனடி உதவிகளைச் செய்யுமாறும் உரியவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்துக்கு புதிய சிற்றூர்தியை வழங்கினார் ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெ. 28

சிறுவர் காப்பகத்திலிருந்து நீதிமன்றம் மற்றும் மருத்துவமனைகளுக்கு சிறுவர்களை அழைத்துச் செல்வதற்காக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்புதிணைக்களத்துக்கு புதிய சிற்றூர்தி ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே நேற்றுமுன்தினம் வழங்கினார்.

சுமார் 94 லட்சம் ரூபா பெறுமதியான இந்தச் சிற்றூர்தியை புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு வடக்கு மாகாணத்துக்கு வழங்கியிருந்தது. அதனை உத்தியோகபூர்வமாக சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரி.சிவரூபனிடம் ஆளுநர் கையளித்தார். (ஐ)

# வீதிக்கு வந்த கடைகளால் பயணிகள் அசௌகரியம்

### வவுனியா நகரசபை அசமந்தம்





வவுனியா, டிசெ. 28

வவுனியா தர்மலிங்கம் வீதியில் வியாபார நிலையங்களுக்கு முன்னால் கொட்டகை அமைத்து வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் போக்குவரத்துச் செய்யும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா, தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு முன்னால் உள்ள வீதி இரு வழிப் போக்குவரத்து வீதியாகும். தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் அந்த வீதி வழியாக பயணம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் இந்த வீதியின் இரு மருங்கிலும் உள்ள வியாபார நிலையங்கள் பலவற்றுக்கு முன்பாக போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கொட்டகைகள் அமைக்கப்பட்டு வியாபாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக அந்த வீதியில் விபத்துக்கள் ஏற்படக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அந்த வீதியில் பயணிக்கும் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா நகரசபை எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அசமந்தமாகச் செயற்படுவதாகவும் நகர மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(ஐ -100)

## நாளை

29.12.2018
சனிக்கிழமை
நட்சத்திரம்: உத்தரம் பி.ப 2.17 வரை
திதி : ஸப்தமி மு.ப 9.18 வரை
சுபநேரம் : 3.28 – 4.58 வரை
இராகுகாலம் : 9.28 – 10.58 வரை

# சாவகச்சேரி பிரதேச சபைக்கு மத்திய அரசிடமிருந்து நிதி

## வடக்கு ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம். டிசெ. 28

சாவகச்சேரி பிரதேச சபையின் சேவைகளை விஸ்தரிப்பதற்கு, ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்களுக்கும், ஆளுநருக்கும் இடையே நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சாவகச்சேரி பிரதேசசபை தலைவர் வாமதேவன் தலைமையிலான பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர்கள் உள்ளிட்டோர் ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, பிரதேச சபையின் சேவையை விஸ்தரிக்க டபிள்கப் வாகனம் ஒன்றைப் பெற்றுத் தருமாறும், சபைக்குப் போதிய வருமானம் இல்லாமை காரணமாக வீதிகள் மற்றும் வீதி விளக்குகளைப் பொருத்துவதற்காக மேலதிக நிதியைப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை, சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்று வரும் சட்டவிரோத மண் அகழ்வுகள் மற்றும் மறவன்புலவுப் பகுதியில் காற்றலை மூலம் மின்சாரம் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் பணிகள்,



அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் ஆளுநரிடம் எடுத்துரைத்தனர்.

இவற்றைச் செவிமடுத்த ஆளுநர், அனைத்து கோரிக்கைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுக்களை நடத்தி மத்திய அரசின் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், காற்றலை விவகாரம் மண் அகழ்வு தொடர்பில் நேரடியாக கண்காணித்த பின்னர் நடவடிக்கை எடுப்பதாகவும் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கௌரவமாக ஒதுங்க மைத்திரி தீர்மானம்



கொழும்பு, டிசெ. 28

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஐந்து ஆண்டு பதவிக் காலத்தையும் முழுமையாகப் பூர்த்தி செய்துவிட்டு இரண்டாவது முறை தேர்தலில் போட் டியிடுவதில்லை என்று தீர்மானித்திருப்பதாக அவரது குடும்ப வட்டாரங்கள் கூறியுள்ளன.

விடுமுறையில் தற்போது குடும்பத்தினருடன் தாய்லாந்து சென்றிருக்கும் ஜனாதிபதி சிறிசேன அங்கு அவர்களுடன் தனது அரசியல் எதிர்காலம் குறித்து ஆராய்ந்ததாகவும், இலங்கையின் தற்போ தைய அரசியல் நிலைவரம் குறித்து கடுமையான கவலையை அவர் வெளிப்படுத்தியதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி கௌரவமான முறையில் ஓய்வு பெறும் முகமாக அவரது மக்கள் செல்வாக்கை அதிகரிப்ப தற்கான செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு அவ ரது ஆலோசகர்களில் ஒருவரிடம் குடும்ப உறுப்பினர் ஒருவர் கேட்டுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. (ஐ)

# இலங்கை கறிவேப்பிலைக்கு ஐரோப்பிய நாடுகளில் தடை



கொழும்பு, டிசெ. 28

இத்தாலி, சைப்ரஸ், கிறீஸ், மால்டா போன்ற நாடுகளுக்கு, இலங்கையில் இருந்து கறிவேப்பிலைகளைக் கொண்டுவரத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக, இத்தாலியின் கட்டானியா, சிசிலியில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் இருந்து, கறிவேப்பிலைகளைக் கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த நாடுக ளுக்கு வரும் பயணிகள் இலங்கையில் இருந்து கறிவேப்பிலைகளை எடுத்து வரவேண்டாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து இத்தாலிய விமான நிலையங்களுக்கு வந்தவர்களின் பைகளில் இருந்து கறிவேப்பிலைகளை, இத்தாலிய சுங்கப் பிரிவினர் பறிமுதல் செய்து வந்தனர்.

இலங்கைக் கறிவேப்பிலைகளில் ஆபத்தான உயிரிகள் இருக்கின்றன என்ற அடிப்படையில், ஐரோப்பிய நாடுகளுக்கு அவற்றை எடுத்து வருவ தற்கு, கடந்த 24ஆம் திகதி தொடக்கம், தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# குகவரதனை இடைநிறுத்தினார் மனோ

கட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டமை, கட்சி ஒழுங்கு விதிகளை மீறியமை போன்ற காரணங்களுக்காக மேல் மாகாணசபை உறுப்பினர் சண்முகநாதன் குகவரதன், கட்சியின் அடிப்படை அங்கத்துவத்திலிருந்தும் சகல பொறுப்புகளிலிருந்தும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இடைநிறுத்தப்பட்டுள்ளார் என ஜனநாயக மக்கள் முன்னணி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குகவரதன் வகித்து வந்த கட்சியின் உபதலைவர் பதவிக்கு, கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சின்னத் தம்பி பாஸ்கரா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் அடுத்த வாரம் கூடும் கட்சியின் அரசியல் குழு பரிசீலித்து இறுதி முடிவை எடுக்கும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)


# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 21 புன்னாலை வீதி, ஆதன இல 695A என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் இராஜரட்ணம் மகள் யோகேஸ்வரி என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் ஓட்டுமடம் இராசரத்தினம் மகள் இராஜேஸ்வரி என்பவர் பிரசித்த நொத்தாரிசு அ. சொக்கலிங்கம் முகதாவில் 1977.10.26 ஆந் திகதியட்டு 3106 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் இராசரத்தினம் மகள் யோகேஸ்வரிக்கு அறுதியாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் 1989.03.31ஆம் திகதியிட்டு 773 ஆம் இலக்க நிபந்தனை உறுதி மூலம் ஓட்டுமடம் இராசரத்தினம் மகள் யோகேஸ்வரி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த றூபஸ் பொக்கனின்யோ சேப்பின் அருள்மேரி என்பவர்களுக்கு நிபந்தனையாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு இ.ஜெயசிங்கம் முகதாவில் 1990.03.21 ஆந் திகதியிட்டு 798 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா பெண் யோகேஸ்வரி, குறித்த ஆதனத்தை சின்னப்பு நாயகம் ஜோசேப் செல்வநாயகம் பெண் வாணிகா எஸ்கலின் ரஜிதா என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 2002.11.30 ஆந் திகதியிட்டு 3122 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் நாரந்தனையைச் சேர்ந்த தற்போது கனடாவில் வசிக்கும் சின்னப்புநாயகம் ஜோசப் செல்வநாயகமும் பெண் பெனிங்னா எங்கலைன் ரஜிதா குறித்த ஆதனத்தை குட்டித்தம்பி தியாகராஜாவுக்கும் பெண் காஜிதாவுக்கும் அறுதியாக வழங்கியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 2018.08.20 திகதியிட்டு 15453 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்திய உறுதியில் 773 ஆம் இலக்க நிபந்தனை அறுதி உறுதியின் அறுதி வாங்கற்காரர்களான றூபஸ் பொன்கலன் யோசேப்பையோ பெண் அருள்மேரியையோ கண்டுகொள்ள முடியவில்லையென்றும் சுமார் 25 வருடங்களாக குறித்த ஆதனம் தமது கட்டுப்பாட்டினதும் ஆட்சியிலும் உள்ளதென்றும் வெளிப்படுத்தியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 2018.08.20 திகதியிட்டு 15454 இலக்க அறுதி உறுதி மூலம் Adlikentrasse-468105, Rejensdorf, Switzerland இல் வசிக்கும் குட்டித்தம்பி தியாகராஜாவும் பெண் காஜிதாவும்இ 81 சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை சாந்தகுமாருக்கும் பெண் யசோதினிக்கும் குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளனர்.

ஆதன விபரம்: - வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை 'பாண்டி வயலும் துரும்ப வயலும், றகு தறைபாண்டி வயலும்' இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் S.பாலேந்திரன் அவர்களின் வரைபட இலக்கம் 2018/317/2018.06.15 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர.3குளி 9.78 ஆகும்

**கிழக்கு:**- மானிப்பாய் வீதி
**வடக்கு:**- அரச நிலம்.
**மேற்கு:**- வைத்திலிங்கம் கணேசலிங்கத்தின் ஆதனம்
**தெற்கு:**- செல்வநாயகம் பெண் ராஜேஸ்வரியின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை சாந்தகுமார் பெண் யசோதினி தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும்இ உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சாந்தகுமார் பெண் யசோதினி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**



குமாரிகட்டா சந்தையில் விற்பனைக்காக வரிசையா எலிகள் வைக்கப்பட்டுள்ள காட்சி



குமாரிகட்டா சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள எலிக்கறி



எலிக்கறியை ஆர்வத்துடன் வாங்கும் மக்கள்

# அஸாமில் சூடு பிடிக்கும் எலி இறைச்சி பிஸ்னஸ்

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் உள்ள பக்சா மாவட்டத்தில் பன்றி, கோழி இறைச்சியை மக்கள் விரும்பி சாப்பிடுவதைக் காட்டிலும், எலிக் கறி மீதுதான் மோகம் அதிகரித்துள்ளது.

தலைநகர் குவஹாட்டியில் இருந்து 90 கி.மீ. தொலைவில் இந்திய – பூட்டான் எல்லை அருகே இருக்கும் குமாரிகட்டா வாரச்சந்தையில் எலிக்கறி கிலோ ரூ.200க்கு விற்பனையாகிறது.

‘ஃபிரஷ்’ எலிக்கறி, வேகவைக்கப்பட்ட எலிக்கறி, தோல் உரிக்கப்பட்ட எலிக்கறி போன்றவை வகை வகையாக விற்கப்படுவதால் மக்கள் ஆர்வத்துடன் வாங்குகின்றனர்.

அஸாம் மாநிலத்தின் நல்பாரி, பார்பேட்டா, குமாரிக்கட்டா மாவட்டங்களில் பகுதியில் உள்ள பழங்குடியினர் உள்ளிட்ட பல்வேறு சமூக மக்களின் பாரம்பரிய உணவாக எலிக்கறி இருப்பதால், இதை மக்கள் விரும்பி வாங்குகின்றனர்.

எலிக்கறி விற்பனை சூடுபிடித்து இருப்பதால், கோழிக்கறி, பன்றிக்கறி விற்பனை மந்தமாகியுள்ளது என்று இறைச்சி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குமாரிக்கட்டா பகுதியில் உள்ள விளைநிலங்களில் புகுந்து எலிகள் தானியங்களை அழித்து வருகின்றன. இதைத் தடுப்பதற்காக எலி பிடிப்பவர்களை விவசாயிகள் நியமிக்கின்றனர்.

எலி பிடிக்கும் பழங்குடி, ஆதிவாசி மக்கள், இரவு நேரத்தில் வயலுக்குச் சென்று, வளையில் இருந்து வெளியே வரும் எலிகளை லாவகமாகப் பிடித்து விற்பனைக்குக் கொண்டு வருகின்றனர்.

ஆதிவாசி சமூகத்தினர் மட்டும் இந்த எலி பிடிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்யும் ஆதிவாசி மக்கள், கூடுதல் ஊதியத் தேவைக்காக இதுபோன்ற எலி பிடிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து எலிக்கறி விற்பனையாளரான சம்ரா சோரன் கூறுகையில் – சமீபகாலமாக வயல்களை நாசம் செய்யும் எலிகள் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. நெல் வயல்களை நாசம் செய்யும் எலிகளைப் பிடிக்க விவசாயிகள் எங்களிடம் கூறுகின்றனர். அவர்களுக்கு உதவ, இரவு நேரத்தில் மூங்கில் மூலம் அமைக்கப்பட்ட எலி பிடிப்பான் மூலம் எலிகளைப் பிடிக்கிறோம். எலி பிடிக்கச் சென்றால், ஒருநபர் நாள் ஒன்றுக்கு 20 முதல் 30 கிலோ எலிகள் வரை பிடித்து வருகிறோம். சில நேரத்தில் ஒரு எலி ஒரு கிலோவுக்கும் அதிகமான எடையில் இருக்கும். இதை மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர் எனத் தெரிவித்தார்.

# சபரிமலைக்கு வரும் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸ் மறுப்பு

பத்தனம்திட்டா,டிசெ.28

’சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வரும் பெண்களுக்கு, பாதுகாப்பு வழங்க முடியாது’ என கேரளா பொலிஸ் தெரிவித்துள்ளது.

கேரளாவில் உள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குள், ’அனைத்து வயது பெண்களை அனுமதிக்க வேண்டும்’ என உச்ச நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது. இதையடுத்து கேரளா, ஆந்திரா, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த பெண்கள், ஐயப்பன் கோவிலுக்கு செல்ல முயன்றனர்.அவர்களுக்கு, கேரள அரசு, பொலிஸ் பாதுகாப்பு வழங்கியது. ஆனால் பக்தர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தமையால், அந்தப் பெண்கள் பாதி வழியில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

’சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வரும் பெண்களுக்கு இனியும் பாதுகாப்பு வழங்க முடியாது’ எனக் கேரளப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்நிதான சிறப்பு அதிகாரியான கேரள டி.ஜி.பி., லோக்நாத் பெஹ்ராவிடம், பொலிஸார் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: –

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வரும் பெண்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் விளம்பரத்துக்காகவே வருகின்றனர். இந்தப் பெண்களைக் கோவிலுக்குள் அனுமதிப்பதால், விபரீத விளைவுகள் ஏற்படக் கூடும். எனவே, சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு வரும் 50 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது. – இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



(உ)

# இந்திய ஜனாதிபதியின் பாதுகாப்புக்கு மூன்று சாதியினர் மட்டுமே தெரிவாம்!

## அரசு, இராணுவத்திடம் விளக்கம் கோருகிறது நீதிமன்று

இந்தியக் குடியரசுத் தலைவரின் சிறப்புப் பாதுகாப்புப் படைக்கு ஜாட்கள், ராஜபுத்திரர்கள் மற்றும் ஜாட் சீக்கியர்கள் என 3 சாதிகளில் இருந்து மட்டுமே ஆள்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தொடுக்கப்பட்டுள்ளது.

இதை விசாரித்த உயர் நீதிமன்றம் மத்திய அரசும் இராணுவத் தலைவரும் வரும் மே 8 ஆம் திகதிக்கு முன்னர் இதற்குப் பதிலளிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இந்த மனுவை ஹரியாணா மாநிலம், ரிவாரி மாவட்டத்தைச் சேர்ந்த கவுரவ் யாதவ் என்பவர் தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது: –

’’கடந்த 2017ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் திகதி குடியரசுத் தலைவருக்கான சிறப்புப் பாதுகாப்புப் படைக்கான ஆள்சேர்ப்பு நடந்தது. அதில் ராஜபுத்திரர்கள், ஜாட்கள் மற்றும் ஜாட் சீக்கியர்கள் என 3 சாதி ஆண்களுக்கு மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

நான் ஆஹிர்/ யாதவா வகுப்பைச் சேர்ந்தவன். குடியரசுத் தலைவர் சிறப்புப் பாதுகாப்புப் படைக்குத் தேர்வாக அனைத்து விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தேன். நான் தேர்வு செய்யப்படுவேன் என்று நினைத்தேன். ஆனால் சாதி காரணமாக நான் தேர்வாகவில்லை.

இந்தத் தேர்வு இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது. அடிப்படை உரிமைகளுக்கான ரத்துக்களை இது முழுமையாக மீறுகிறது. அத்துடன் இனம், மதம், சாதி, பாலினம், நிறம் மற்றும் பிறப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு பாகுபாடு காண்பதைத் தடுக்கும் ரத்துக்கும் இது எதிரானது. – இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டாக்காலிப் பசுக்களுக்கும் இனி உ.பியில் சரணாலயங்கள்




லக்னோ,டிசெ.28

*உத்தரப்பிரதேசத்தில் கட்டாகாலிகளாகத் திரியும் பசுக்களுக்கு சிறந்த தங்குமிட வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என அம் மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யாநாத் கூறியுள்ளார்.*

*முதலமைச்சர் யோகி ஆதித்யாநாத் நேற்று உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். அப்போது, தெருக்களில் திரியும் பசுக்களுக்கு சிறந்த தங்குமிட வசதிகளை ஏற்படுத்த வேண்டும். இதற்கான பரிந்துரைகளை தலைமைச் செயலாளர் ஒரு வாரத்தில் வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.*

*அதோடு, கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாநிலத்தில் உள்ள 750 கோசாலைகளில் பசுக்களுக்கு சரியான உணவு, பாதுகாப்பு இடம், குடிதண்ணீர் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார்.*

# 99 வயதில் 29ஆவது முறை இமயம் தொட்ட இளைஞர்!



சிலருக்கு வயது என்பது வெறும் எண்கள்தான்.கேரளாவைச் சேர்ந்த சித்ரன் நம்பூதிரிபாட் அத்தகையவர். தனது 99 வயதில் 29 ஆவது முறையாக இமயம் தொட்டிருக்கிறார்.

கேரளக் கல்வித் துறையின் முன்னாள் கல்வி இயக்குநரான சித்ரன், தனது 100 ஆவது வயதில் முப்பதாவது முறையாக இமயமலை செல்ல ஆசைப்படுகிறார்.

கடந்த டிசம்பர் முதல் வாரம் இமயமலை சென்ற இவர், பத்ரிநாத், கேதார்நாத் உள்ளிட்ட இடங்களுக்கும் சென்றிருக்கிறார்.

தேசிய விருது பெற்ற கல்வியாளரான சித்ரனின் இமயமலை மீதான காதல் 1952இல் தொடங்கியது. 30களில் அவர், தன்னுடைய நண்பர் ஒருவருடன் இமயமலைக்குச் செல்ல முயன்றார். ஆனால் உணவு நச்சுக் காரணமாகப் பயணத்தின் பாதியிலேயே அவர் திரும்ப நேர்ந்தது.

’’அடுத்ததாக 1956இல் முயன்றேன். வெற்றிகரமாக இமயமலையைத் தொட்டுத் திரும்பினேன். பனி சூழ்ந்த மலைகள் என்னைத் திரும்பத் திரும்ப அழைத்தன. ஆனால் இப்போது உள்ள சாலை மற்றும் கட்டமைப்பு வசதிகள் போல அப்போது இல்லை. இமயமலைக்குச் செல்லும் பாதை கடினமாக இருந்தது. அடர்ந்த வனங்களில் தொடர்ந்து நடக்க வேண்டும். ருத்ரபிரயாக்கில் இருந்து பத்ரிநாத் செல்ல 90 கி.மீ. தூரம் நடந்திருக்கிறேன்” என்கிறார்.

# ரஷ்ய எல்லையில் உக்ரைன் பிறப்பித்த இராணுவச் சட்டம் புதனன்று வாபஸ்!





கீவ்,டிசெ.28

ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் உக்ரைன் நாட்டில் கடந்த ஒரு மாதகாலமாக நடைமுறையில் இருந்த இராணுவச் சட்டம் முடிவுக்கு வந்துள்ளதாக அந்நாட்டு அதிபர் அறிவித்துள்ளார்.

உக்ரைனின் கிரிமியா பகுதியை கடந்த 2014 இல் ரஷ்யா தன்னுடன் பலவந்தமாக இணைத்ததில் இருந்து இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்நிலையில், கிரிமியா அருகே கெர்ச் ஜலசந்தியில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை ரஷ்யா கடந்த மாதம் கைப்பற்றியது. தங்கள் பகுதியில் சட்டவிரோதமாக அவை நுழைந்தன எனக் கூறி இந்த நடவடிக்கையை ரஷ்ய இராணுவம் எடுத்தது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் பகிர்ந்து கொள்ளும் கெர்ச் ஜலசந்தியானது, அஸோவ் கடலுக்கு செல்லும் ஒரே பாதை ஆகும். அந்த பகுதியில் ரஷ்யா தனது டாங்கர் கப்பலை நிறுத்தி உள்ளது. அத்துடன் ரஷ்ய போர் விமானங்களும் அந்த பகுதியில் பறக்கின்றன. இதனால் எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவி வந்தது. உக்ரைன் கப்பல்களை ரஷ்யா கைப்பற்றியதையடுத்து அசோவ் கடற்பகுதியில் பதற்றம் மேலும் அதிகரித்தது.

இதையடுத்து நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ரஷ்ய எல்லையில் உள்ள குறிப்பிட்ட பிராந்தியங்களில் இராணுவத்திற்கு முழு அதிகாரம் வழங்கக்கூடிய இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடிவு செய்தது. இதற்காக நாடாளுமன்றத்தில் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கடந்த மாதம் 28ஆம் திகதி இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. ஒரு மாத காலம் இந்த சட்டம் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் எல்லைப் பிராந்தியங்களில் நடைமுறையில் உள்ள இராணுவச் சட்டம் நேற்று முன்தினத்துடன் (புதன்) முடிவுக்கு வந்துவிட்டதாக அதிபர் பெட்ரோ போரோஷென்கோ அறிவித்தார். தேசிய பாதுகாப்பு மற்றும் இராணுவ கவுன்சில் கூட்டத்தில் உரையாற்றியபோது இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டார். நாட்டின் பாதுகாப்பு சூழ்நிலை தொடர்பான அனைத்து கூறுகளையும் ஆராய்ந்து இந்த முடிவுக்கு வந்ததாக அவர் கூறினார்.

(உ)

## சிரியாவின் மீது இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல்!



தங்கள் நாட்டின் மீது இஸ்ரேல் யாரும் எதிர்பாராத நேரத்தில் வான்வழித் தாக்குதல் நடத்தியதாக சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து சிரிய ஈராணுவத் தரப்பினர் கூறுகையில், பலத்த சத்தத்துடன் இஸ்ரேல் படைகள் அவர்கள் எல்லை யிலிருந்து எங்களது இராணுவ கிடங்கை நோக்கி வான்வழித் தாக்குதல் நடத்தினர். இதில் எங்கள் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் காயமடைந் தனர்.

இஸ்ரேலின் பல ஏவுகணைகள் இடைமறித்துத் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதல் தொடர்பான படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் இந்தத் தாக்குதலுக்கு சிரியா தரப்பில் பதிலடி தாக்குதல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தத் தாக்குதல் குறித்து இதுவரை இஸ்ரேல் எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை.

சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும், ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

இதில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசின் கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன.

## ஆப்கன் ஜனாதிபதித் தேர்தல் மீண்டும் ஒத்திப்போடப்பட்டது

வாக்காளர் அட்டை சரிபார்ப்பு மற்றும் சில தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக ஆப்கானிஸ்தானில் அதிபர் தேர்தல் தள்ளி வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முறைகேடுகளைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை என்று ஆப்கன் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தரப்பில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கன் அதிபர் தேர்தல் கடந்த ஏப்ரல் மாதமே நடக்கவிருந்த நிலையில், வாக்குப்பதிவு சாதன முறைகேடு குறித்த குற்றச்சாட்டுகள் எழுந்ததால் அதிபர் தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது. இந்த நிலையில் மீண்டும் அதிபர்தேர்தல்நாள் குறிப்பிடாமல்தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் ஆப்கனில் நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப் பதிவு சாதனத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தாமதமாகத் தொடங்கியது. மேலும் வாக்குச்சாவடியில் வாக்காளர்களின் பெயர்கள் பதிவாகவில்லை என்ற குற்றச்சாட்டுகளும் எழ, இதனைத் தொடர்ந்து இரண்டாவது நாள் வாக்குப்பதிவு தொடங்கி இறுதியில் இதன் முடிவுகள் பெரும் விமர்சனத்துக்கு ஆளாகின. வேட்பாளர்கள் பலரும் புகார்களும் அளித்தனர்.

அவ்வாறு மீண்டும் நடந்துவிடக் கூடாது என்பதைக் கவனத்தில் கொண்டு ஆப்கானிஸ்தான் அரசு அதிபர் தேர்தலை ஒத்திவைத்துள்ளதாக தேர்தல் அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆப்கனில் கடந்த 2014 ஆம் ஆண்டு இறுதியாக நடந்த அதிபர் தேர்தலிலும் முறைகேடுக் குற்றச்சாட்டுகள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியப் பிள்ளைகள் மூவர் அமெ. தீ விபத்தில் மரணம்!



அமெரிக்காவில் இடம்பெற்ற தீவிபத்து ஒன்றில் இந்தியாவைச் சேர்ந்த பதின்ம வயதுச் சகோதரங்களான மூன்று பிள்ளைகள் உயிரிழந்தனர்.

அமெரிக்காவின் டெனிஸ் மாகாணத்தில் வசித்து வருபவர் ஸ்ரீநிவாஸ் நாயக். இவர் தெலங்கானா மா நிலம் நல்கொண்டாவைச் சேர்ந்தவர். அமெரிக்காவின் டெனிஸி, மிஸிசிப்பி மாகாணங்களில் கிறிஸ்து மதப் போதகராகப் பணியாற்றி வருகிறார். இவர் டெனிஸி மாகாணத்திலுள்ள காலியர்வில்லே நகரில் தனது குடும்பத்தாருடன் தங்கியுள்ளார்.

இந்நிலையில் இவர் தனது மனைவி சுஜாதாவுடன், இரு மாதங்களுக்கு முன்பு தெலங்கானாவுக்கு வந்தார். இவரது குழந்தைகள் ரோன் (17), ஜாய் (15), ஆரோன் (14) ஆகியோர் காலியர்வில்லேவில் படித்து வந்ததால் அவர்கள் அங்கேயே தங்கிவிட்டனர்.

இந்நிலையில் 2 நாள்களுக்கு முன்பு ஸ்ரீநிவாஸ் நாயக்கின் வீட்டில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் நடந்தது. அப்போது வீட்டில் திடீரென தீப்பற்றி மள மளவென பரவியது. சம்பவம் அறிந்ததும் தீயணைப்பு வண்டிகள் விரைந்து வந்து தீயை அணைத்தன. இந்த விபத்தில் ரோன், ஜாய், ஆரோன், அந்த வீட்டில் இருந்த கேரி கவுட்ரியட் என்ற பெண் ஆகிய 4 பேரும் உயிரிழந்தனர்.

# ஒலியின் 10 மடங்கு வேகத்தில் ஹைப்பர் சோனிக் ஏவுகணை!





## தயாரிப்பில் வெற்றி கண்டது ரஷ்யா

மொஸ்கோ,டிசெ.28

தங்கள் நாட்டின் அதிநவீன ஹைப்பர் சோனிக் ஏவுகணையின் இறுதிக்கட்ட சோதனைகள் வெற்றிகரமாக நிறைவு பெற்றன என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

தற்போது நடப்பில் உள்ள ஏவுகணைப் பாதுகாப்பு அமைப்புகளால் கண்டுபிடித்து அழிப்பதற்கு இயலாத அளவுக்கு இது நவீனமானது என்று ரஷ்யாவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலகிலேயே இந்தப் புதுவிதத் தந்திரோபாய முக்கியத்துவம் மிக்க ஆயுதத்தை தயாரிக்கும் முதல் நாடு ரஷ்யா என்கிறார் அதிபர் புடின்.

பாதுகாப்புப் படைகளுக்கும், நாட்டுக்கும் இது மிக முக்கிய நிகழ்வு என்று அவர் கூறியுள்ளார்.

இந்தப் புதுமையான அமைப்பு அணு ஆயுதங்களைச் சுமந்து செல்ல வல்லது என்றும், இது அடுத்த ஆண்டுராணுவ சேவையில் இணையும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

தனது பேச்சின்போது இந்தப் புதிய ஆயுதும் ஒரு நெருப்புப் பந்து போல தாக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

ஒலி வேகத்தைப் போல 10 மடங்கு வேகமாகச் செல்லக்கூடிய இந்த ஏவுகணை, எதிர்கொண்டு மறித்து அழிக்கும் ஏவுகணைகளை ஏமாற்றும் வகையில், அதிவிரைவாக திசையை மாற்றி மாற்றிப் பறக்கும் திறன் படைத்தது என்றும் கூறப்பட்டது.

# அமைச்சர்கள் எண்ணிக்கை; நீதிமன்று செல்லும் ஐ.தே.க.

தற்போதைய அரசின் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் நீதிமன்றத்திடம் விளக்கம் கோரவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள சுற்றாடல் அமைச்சில் நேற்று முன் தினம் தனது கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் பிரதி அமைச்சர் அஜித் மான்னப்பெரும இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து கூட்டு அரசு என்ற எண்ணக்கருவை நடைமுறைப் படுத்த நாம் முயற்சி எடுத்தோம். இதன்படி, அமைச்சர்களுக்கான பட்டியலைத் தயார் செய்து ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தோம். ஜனாதிபதி அதனை நிராகரித் திருந்தார்.

அத்துடன், அரசமைப்பில் தனி அரசு தொடர்பில் குறிப்பிட்டுள்ள 30 அமைச்சுக்கள் என்ற விடயத்துக்கு 28 பேரையே ஜனாதிபதி நியமித்திருந்தார். ஜனாதிபதி எடுத்துள்ள அமைச்சையும், பிரதமர் எடுத்துள்ள அமைச்சையும் சேர்த்தே 30 என ஜனாதிபதி கருத்தில் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்து முரண்பாடு உள்ளது. இது குறித்தே நீதிமன்றத்திடம் விளக்கம் கோரவுள்ளோம் – என்றார். (ஐ)

## இடைத்தங்கல் முகாம்களை பார்வையிட்டார் சிறிதரன்



கிளிநொச்சி, டிசெ. 28

கிளிநொச்சியில் பெய்து வரும் கன மழை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களான திருநகர் சுரபி முன்பள்ளி, சிவநகர் பாடசாலை, உருத்திரபுரம் மகாவித்தியாலயம் போன்ற வற்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

மக்களின் தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்ததுடன், அவர்களின் உணவுத் தேவைகள், சுகாதாரத்தேவைகள் போன்ற வற்றை உரிய முறையில் தீர்த்து வைக்குமாறு அதிகாரிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பணிப்புரை விடுத்தார். (ஐ)

## கிராண்ட்பாஸ் துப்பாக்கிச் சூடு; சந்தேகநபரின் காதலி கைது

கொழும்பில் கிராண்ட்பாஸ் ஹனேமுல்லைப் பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வரும் பூளுஸெடல் சங்கா என்பவரின் காதலி கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை தொடர்ந்து சந்தேக நபர் பமுனுகம பகுதியில் அமைந்துள்ள தனது காதலி வீட்டுக்குச் சென்றுள்ளார் எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களையடுத்து பொலிஸார் அங்கு சென்றனர். அந்தப் பெண் சந்தேக நபர் துப்பாக்கிச் சூட்டின் போது அணிந்திருந்ததாகக் கூறப்படும் ஆடைகளை எரித்துள்ளதாகவும் இதன்போது பொலிஸார் பகுதி எரிந்த ஆடையை மீட்டெடுத்துள்ளதாகவும், இதனை தொடர்ந்தே சந்தேகத்தில் அந்த பெண் கைதாகியுள்ளார் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 08, கொழும்புத்துறை வீதி, ஆதன இல 262/10 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ளு.சபாபதியின் உரிமையாளர் என்னும் பெயரில் ஆதனவரிப் பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கொழும்புத்துறை மேற்கு, இல106, கொழும்புத்துறையில் வசித்தவரும்இ தற்பொழுது இல 11 1/1 நொறிஸ் அவனியூ, பொறல்லையில் வசிப்பவருமாகிய கனகசபை பாலகிருஸ்ணன் பெண் செந்தில் செல்வி என்பவர் பிரசித்த நொத்தாரிஸ் இ.பாலேந்திரா முகதாவில் 1997.04.17 ஆம் திகதியிட்டு 3017மற்றும் 3018 ஆம் இலக்கங்களில்; அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதிகள் மூலம் குறித்த ஆதனம் 30 வருடங்களுக்கு மேலாக தனது பிதாவின் இடையூறற்ற தொடர்ச்சியான ஆட்சி உடையதாக இருந்ததென்று குறிப்பிட்டு ஆட்சியுரித்து பெற்றிருந்தார். மாதாவால் நன்கொடையளிக்கப்பட்டதென்று முறையே நில.பர.3 ஐ பாலகிருஸ்ணன் அருண்பிரகாஸிற்கும், நில.பர.3ஐ பாலகிருஸ்ணன் ராம்பிரகாசிற்கும் அறுதியாக விற்றுள்ளார். குறித்த பா.ராம்பிரகாசும் பா.அருண்பிரகாசும் பிரசித்த நொத்தாரிசு வி.ஜெயந்தா முகதாவில் நிறைவேறிய 2018.01.29 ஆம் திகதியிட்டு 108 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தில் நில.பர.1குளி 0 இனை இல.44, ஆனந்தன்வடலி, கொழும்புத்துறையைச் சேர்ந்த கதிரமலை புவனேந்திரனுக்கும் பெண் ஜெய்சி ஆகியோரிற்கு அறுதியாக விற்றுள்ளனர். இதே நொத்தாரிசு முகதாவில் 2018.03.03 ஆம் திகதியிட்டு 113 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம்; கதிரமலை புவனேந்திரனும் பெண் ஜெய்சியும் அதே இடத்தைச் சேர்ந்த ஜேசுதாஸ் ஜெனத்துக்கும் பெண் விஜேனாஜாவுக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

ஆதன விபரம் :– வடமாகாணம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, கொழும்புத்துறை இறைகொள்ளுப்பிட்டி தறையும், மறுபிரிவுகளும்' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.K சிவானந்தன் அவர்களின் வரைபட இலக்கம் 4546/2014.03.17 இல் நில.பர.4 குளி 3.15 இல் துண்டு – 2 எனக்காட்டப்பட்ட நில.பர.1 குளி 1.00 ஆகும்.

**கிழக்கு:** - ஒழுங்கை

**வடக்கு:** - கதிரமலை புவனேந்திரனுக்கும் பெண் ஜெம்சியாவுக்குமுரிய ஆதனம்.

**மேற்கு:** - சந்திரசேகரம் தியாகராசா இரத்தினசபாபதிக்கும் மறு பேருக்குமுரிய ஆதனம்.

**தெற்கு:** - சிங்கராஜன் இராசகுமாரும் பெண் ஜெனிங்சரும்.

தற்போது இவ்வாதனத்தை ஜேசுதாஸ் ஜெனத் உம் பெண் விநோஜாவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது ஜேசுதாஸ் ஜெனத் உம் பெண் விநோஜாவும் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்**

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 09, திருமகள் வீதி, ஆதன இல 16/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சி.வைகுந்தசாமி சரஸ்வதி என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை சண்முகம் மாணிக்கம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு ஊ.தில்லையம்பலம் முகதாவில் 1954.08.02 ஆந் திகதியிடப்பட்டு 506ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி (சுட்டுப்பாடு) உறுதி மூலம் பண்டாரம் கதிர்காமுவும் பெண் பவளமும் என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இதே பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 1955.05.01ம் திகதியிடப்பட்ட 626 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் பண்டாரம் கதிர்காமுவும் பெண் பவளம் சண்முகம் மாணிக்கத்துக்கு அறுதியாக வழங்கியுள்ளனர். இதே நொத்தாரிசு முகதாவில் 1955.05.01 ஆந் திகதியிட்ட 627 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் சண்முகம் மாணிக்கம் என்பவர் கதிர்காமுவும் பெண் பவளமும் என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு தி.திருச்செந்தில்நாதன் முகதாவில் 2003.02.20 ஆம் திகதியிட்டு 419 ஆம் இலக்க நன்கொடை உறுதியில் சிவியாதெரு மேற்கு ஆனால் தற்போது திருகோணமலை, திருமால் வீதியைச் சேர்ந்த கதிர்காமு பெண் பவளம், அருமைலிங்கம் பெண் செல்வமலர், கதிர்காமு யோகநாதன், கதிர்காமு ரஞ்சன் ஆகிய தாங்கள் தங்களின் முதலாமவரின் மகளும்இ மற்றையோரின் சகோதரியுமாகிய சின்னத்துரை பெண் சாந்தமலருக்கு குறித்த ஆதனத்தை நன்கொடையாக வழங்கியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு மேனகா கேசவன் முகதாவில் 2015.7.16 ஆம் திகதியிட்டு 732 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் 2003.02.20ஆம் திகதி 419 ஆம் இலக்கத்தில் தனது மாதா காலஞ்சென்ற சின்னத்துரை பெண் காந்தமலர் பெயரில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி தனது மாதாவழி முதுசமும் அடியற்று காலஞ்சென்ற சகோதரன் சின்னத்துரை மனோகரன் வழியாக வந்தடைந்த உரித்துமான 2015.07.05 ஆந் திகதி திருகோணமலை மாவட்ட பிரசித்த நொத்தாரிசு அப்துல் மஜீது அனித லெப்பை முகதாவில் தன் பெயரில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி நன்கொடையும் ஆட்சியுமானது என்றும் வெளிப்படுத்தி, பூமகள் வீதி, இலக்கம் 19 ஜச் சேர்ந்த நாகமுத்து பாலகிருஸ்ணனும் பெண் செல்வலக்சுமி என்பவர்களுக்கு அறுதியாக வழங்கியுள்ளனர்.

ஆதன விபரம்:–

1955.05.01 ஆம் திகதியில் 627 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் படி காலஞ்சென்ற பண்டாரம் கதிர்காமுவும் பெண் பவளத்துக்கும் சொந்தமாக இருந்து பண்டாரம் கதிர்காமு காலஞ்சென்ற பின்னர் உரிமையாக நன்கொடை கொடுநர், நன்கொடை பெறுநர் ஆகிய தங்களுக்கு வந்து சேர்ந்தது என வட மாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை 'சாயக்கரன் குளம்' நில.பர.2குளி 51/2 இல் தெற்குப்பக்கமாக விடப்பட்ட 6 அடி அகலம் கொண்ட ஒழுங்கை நீங்கலாக மிகுதியில் ஆட்சிப்படி நில.பர.3 இதில் வடக்கரை வாசி நில.பர.11/2 தற்போது 2015.07.03 ஆந் திகதி 1429 ஆம் இலக்கத்தில் உத்தரவு பெற்ற உலாந்தா திரு.கே.நவரட்ணம் அவர்களால் துண்டு – 1 என சுட்டிய நில.பர.1 குளி 02.19 ஆகும்.

**கிழக்கு:**- முருகேசு அரியநாயகத்தின் ஆதனம்.

**வடக்கு:**- சீனிமுத்து வைகுந்தவாசம் பெண் சரஸ்வதியின் ஆதனம்.

**மேற்கு:**- ஒழுங்கை

**தெற்கு:**- ஆறுமுகம் பெண் செல்வமலரின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை பாலகிருஸ்ணனும் பெண் செல்வலட்சுமியும் தமது பெயரிற்கு பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பாலகிருஸ்ணன் பெண் செல்வலட்சுமி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்**

# வடமராட்சி கிழக்கிலும் வெள்ளத்தால் பாதிப்பு

## உதவிகள் இல்லையென மக்கள் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கன மழையால் வடமராட்சி கிழக்கில் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள நிலையில் உதவிகளை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமராட்சி கிழக்கின் ஆழியவளை, உடுத்துறை, கொடுக்கிளாய், தாளையடி போன்ற பிரதேசங்களே வெள்ளத்தில் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலரும் உறவினர்களின் வீடுகளிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ளனர்.

தொடரும் மழையால் அந்தப் பகுதிகளில் மேலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அந்த மக்கள் மேலும் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு தொடர்ந்து பாதிப்புக்களை எதிர்நோக்கி வரும் மக்களுக்கு எதுவிதமான உதவிகளும் வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

வெள்ள இடரினால் கொடுக்கிளாய் – இயக்கச்சி வீதிக்கு குறுக்காக இரணைமடுகுளத்து நீர் பாய்ந்து வருவதால் அந்த வீதியூடான போக்குவரத்துக்கள் பாதிப்படைந்துள்ளன. அத்துடன் கட்டைக்காட்டில் இருந்து தாளையடிக்கான கரையோரப் பிரதான வீதியும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பகுதி மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்வதிலும் போக்குவரத்துக்களை மேற்கொள்வதிலும் பெரும் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவ்வாறு பல வழிகளிலும் அந்த மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற வானிலை சீரின்மை காரணமாக கடற்கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் பல நாள்களாக மீன்பிடித் தொழிலுக்குச் செல்லவில்லை. மேலும் வெள்ளம் காரணமாக விவசாயம் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தமக்கான எந்தவித உதவிகளும் இதுவரை கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ - 07)

## முதலாம் திகதியில் இருந்து கடவுச்சீட்டுகளில் மாற்றம்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரம் என்று விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து விநியோகிக்கப்படாதெனக் குடிவரவு – குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குடிவரவு – குடியகல்வு திணைக்களம் இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த மாதம் 31ஆம் திகதியுடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு மாத்திரம் என விநியோகிக்கப்பட்ட கடவுச்சீட்டுகள் வழங்கும் நடவடிக்கை இரத்துச் செய்யப்படுமென, குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் கட்டுபாட்டுப் பணிப்பாளர் எம்.என் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே முதலாம் திகதியிலிருந்து அனைத்து நாடுகளுக்குமான கடவுச்சீட்டுகளே விநியோகிக்கப்படுமெனவும் அவர் கூறினார். (ஐ)

## தமிழ்க் கூட்டமைப்பு அரசின் பங்காளியல்ல

### கூறுகின்றார் சிவாஜிலிங்கம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி அமைப்பதற்குத் தமிழ்த் தேசியக் ஆதரவு வழங்கியதால் கூட்டமைப்பு அரசின் பங்காளி என்று சொல்ல முடியாது. நாம் அரசுடன் இணையவும் இல்லை. அமைச்சுப் பதவிகளைப் பெறவும் இல்லை எனத் தெரிவித்திருக்கும் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் அரசியல் தலைவருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிழல் அமைச்சர்களாகச் செயற்படுகின்றார்கள் என்ற கருத்தையும் நிராகரித்துள்ளார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் வடமராட்சிகிழக்கில் ஊடகங்களைச் சந்தித்து கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைத் தீவில் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் வரை தென்னிலங்கையில் எந்தக் கட்சியயுடனும் கூட்டு வைப்பதற்கு கூட்டமைப்பு தயாராக இல்லை. அவ்வாறு தெற்கில் உருவாக்கப்படும் எந்தவொரு கூட்டிலும் அங்கம் வகிப்பது என்ற பேச்சுக்கும் இடமில்லை.

ஆனால் தேர்தலுக்கு முன்னர் அல்லது தேர்தல் முடிந்த பின்னர் ஆட்சிக்கு வரக்கூடிய தரப்புக்களுடன் பேரம் பேசுவதும் ஒப்பந்தம் செய்வதுமான நிலைமைகள் தொரலாம். இந்த அரசினூடாக இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு குறித்து பேசப்பட்டாலும் அவ்வாறு இந்த ஆண்டுக்குள் தீர்வு கிடைக்க வாய்ப்பு இல்லை.

ஆனாலும் இடைக்காலத் தீர்வை எடுப்பதை நோக்கமாகக் கொண்டு கூட்டமைப்பு செயற்படுகிறது. அதே நேரம் கூட்டமைப்புத் தலைமை நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்குமென்று நம்பிக் கொண்டிருக்கிறது. ஆயினும் எது எப்படி இருந்தாலும் தீர்வு இந்த ஆண்டுக்குள் இல்லையேல் சர்வதேச அனுசரணையுடன் அவர்களின் தலையீடுகளை நாங்கள் கோருவோம் – என்றார். (ஐ -07)

## 5 பார ஊர்திகளில் வன்னிக்கு அத்தியாவசியப் பொருள்கள்

### அனுப்பிவைத்தார் அமைச்சர் ரிஷாத்



கொழும்பு, டிசெ. 28

வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை தங்கு தடையின்றி வழங்கும் வகையில் லங்கா சதொச நிறுவனத்தின் மூலம் ஒரு தொகை உலர் உணவுப் பொருள்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனக் கைத்தொழில், வணிகத்துறை, நீண்டகால இடம்பெயர்வுக்குள்ளான மக்களின் மீள் குடியற்றம், மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாகப் பெய்து வந்த மழையினால் வடக்கில் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இந்த மக்களுக்கு தேவையான உணவுப் பொருள்கள் சென்றடைவதில் தாமதம் காணப்படுவதாகவும்,

இதனைக் கட்டுப்பாடும், தட்டுப்பாடுகளுமின்றி விநியோகிக்க வேண்டியமை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் இடம் பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய சதொச மூலம் இதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் –

இந்த மக்களுக்குப் போதுமான அளவு பொருள்களைத் தத்தமது மாவட்டத்தில் களஞ்சியப்படுத்தி அவற்றைத் துரிதமாக வழங்க நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் பாதிப்புக்குள்ளான மாவட்ட அரச அதிபர்களிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வேண்டியுள்ளார்.

5 பார ஊர்திகளில் இந்த அத்தியாவசிய பொருள்கள் வெலிசற லங்கா சதொச களஞ்சியசாலையில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை அனுப்பி வைக்கப்பட்டன எனவும், இதில் அரிசி, கிழங்கு, பருப்பு, உப்பு, பால் மா, மற்றும் அத்தியாவசிய பொருள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கூறினார்.

வடக்கில் பெய்த மழையினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு ,மன்னார், வவுனியா யாழ் மாவட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்து அனர்த்த முகாமைத்துவ மற்றும் அரச முகாமைத்துவ அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டார தலைமையில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முக்கிய கலந்துரையாடலொன்று அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இடரால் பாதிப்புற்றோருக்கு முகநூல் மூலம் ஒன்றிணைந்து கரம் கொடுத்த இளைஞர்கள்

கிளிநொச்சி, டிசெ. 28

தமிழர் தாயகத்தில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த நாள்களில் ஏற்பட்ட கடும் வெள்ள இடரால் ஒரு லட்சத்தை அண்மித்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரம் கொடுக்கவென பல்வேறு நாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், தாயகத்தில் உள்ள இளைஞர்களுடன் முகநூல் வழியில் ஒன்றிணைந்து ஓர் குழுமத்தை உருவாக்கி அதனூடாக உடனடி இடர் நிவாரண உதவித் திட்டங்களை வழங்கி வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பேராறு, பண்டாரவன்னியன் கிராமம், வசந்தபுரம் மற்றும் வள்ளிபுனம் பகுதிகளை சேர்ந்த குடும்பங்களுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் பிரமந்தனாறு, தம்பிராசபுரம், குமாரசாமிபுரம், உருத்திரபுரம் மற்றும் பாரதிபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கும் மொத்தமாக 6 இலட்சத்து 55 ஆயிரத்து 405 (655,405) ரூபாய் நிதியில், அவசர அத்தியாவசிய பொருள்கள் மற்றும் உலர் உணவு உள்ளிட்ட உதவிப் பொருள்கள் கடந்த 23 ஆம், 24 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டுள்ளன.

இதன் அடுத்த கட்டமாக வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் செயற்பாட்டை முன்னெடுக்கவும் தன்னெழுச்சியாக ஒன்றிணைந்த இளைஞர் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

இதேவேளை, புலம்பெயர் வாழ் தமிழர்களுடன் இணைந்து முகநூல் வழியில் தன்னெழுச்சியாக இளையோர்கள் ஒன்றிணைந்து இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு தரப்பினர் மத்தியிலும் வரவேற்பு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# பந்தைச் சேதப்படுத்த தூண்டிய சம்பவம் எது?

## மௌனம் கலைத்தார் ஸ்மித்

சர்வதேசப் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ள ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணி யின் முன்னாள் தலைவர் ஸ்டீவ் ஸ்மித், பந்தைச் சேதப்படுத்த தூண்டிய பின்னணி குறித்து மௌனம் கலைத்துள்ளார்.

கடந்த ஆண்டு, தென்னாபிரிக்கா அணிக்கெதி ராகக் கேப்டவுனில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில், பந்தைச் சேதப்படுத்திய குற்றத்துக்கு ஆதரவாக இருந்த ஆஸ்தி ரேலிய அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் மற்றும் துணைத்தலைவர் டேவிட் வோர்னர் ஆகி யோருக்கு



ஓராண்டு தண்டனையும், பந்தைஉப்புத்தாள்கொண்டு சேதப்படுத்திய கமரூன் பான்கிராப்ட் டுக்கு ஒன்பது மாதங்கள் தடையும் கிரிக் கெட் ஆஸ் திரேலியா விதித் தது.

இதில், ஒன்பது மாதங் கள்தடைக்குள்ளானகமரூன் பான்கிராப்ட், தற்போது தடையிலிருந்து மீண்டுள் ளார். இந்நிலையில் ஆஸ் திரேலிய அணியின் முன் னாள் விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறிஸ்ட், அவரிடம் நேர்காணலொன்றை நடத்தி, பல அதிர்ச் சிகரமான உண்மை விடயங்களை வெளிக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து, தற்போது தடையில் உள்ள மற் றொரு வீரரான ஸ்டீவ் ஸ்மித்தையும், கில்கிறிஸ்ட் நேர்காணல் நடத்தியுள்ளார். இதன்போது ஸ்மித் கூறிய கருத்துக்கள் இவை,

நவம்பர் 2016 என்று நினைக்கிறேன், தென்னா பிரிக்காவுக்கு எதிரான ஹோபர்ட் டெஸ்ட்டில் தோல்வி அடைகிறோம். இலங்கைக்கு எதிராக 3 டெஸ்ட் தோல் விகளுக்குப் பிறகு 5ஆவது நேரடி தோல்வி யாக ஹோபர்ட் அமைந்த சமயம். அப்போது ஜேம்ஸ் சதர்லேண்ட், பெட் ஹோவர்ட் ஆகியோர் அறைக்கு வந்து ‘வெற்றி பெறவே உங்களுக்குச் சம்பளம், வெறுமனே விளையாட ம ட்டுமல்ல’ என்று கூறினர்.

இது கொஞ்சம் ஏமாற்றத்தை அளித்தது, யாரும் தோற்கவேண்டும் என்பதற்காகத் திட்டமிட்டு களமிறங்கு வதில்லை. இப்போது பண்பாடு என்றெல்லாம் பேசும் போது இங்கு ஆஸ் தொடரில் 4:0 என்று வென்ற போது பண்பாடு நன்றாக இருந்தது என்றே கூறப்பட் டது. இப்போது உடனடியாக எல்லாம் மாறிப்போய் விட்டது, பண்பாடு கெட்டு விட்டது என்றெல்லாம் பேசுகிறோம்.

நிச்சயமாக கேப்டவுனில் பந்தைச் சேதப்படுத்தியதற்கு பிறகே மக்கள் ஆஸ்திரேலிய கிரிக்கெட் பண்பாடு தேய்ந்துவிட்டது என்று கூறினார்கள். மக் கள் அப்படித்தான் நினைப்பார்கள். ஆனால் பண்பாடு மோசமடைந்ததாக நான் நினைக்கவில்லை.

இப்போதைக்கு அணியின் தலைவராக வேண்டும் என்ற எண்ணமெல்லாம் எனக்கு இல்லை, மீண்டும் ஆஸ்திரேலியாவுக்காக விளையாடவேண்டுமென்பதே பிரதானம். டிம் பெய்ன் தலைமையின் கீழ் விளையாடவும் விருப்பமாகவே இருக்கிறேன். உலகக் கிண்ண தொடரில் பிஞ்ச் தலைமையில் விளையாட வும் விரும்புகிறேன். இப்போதைக்கு இதுதான் என் குறிக்கோள் அதை நோக்கித்தான் விளையாடிக் கொண்டிருக்கிறேன் – என் றார்.

## புதிய மைல்கல்லை எட்டினார் மத்தியூஸ்

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் சார்பில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட் டங்கள் குவித்த வீரர்கள் வரிசை யில் மத்தியூஸ் 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

இலங்கை – நியூசிலாந்து அணிகள் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது.

இந்த போட்டியின் முதல் இன்னிங்ஸில் இலங்கை வீரர் அஞ்சலோ மத்தியூஸ் அவுட்டாகாமல் 33 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் அவரின் மொத்த டெஸ்ட் ஓட்டங் கள் 5532ஆக உயர்ந்தது.

இதையடுத்து இலங்கை அணியின் முன்னாள் வீரர் அத்தப்பத்து எடுத்திருந்த 5502 ஓட்டங்களை மத்தியூஸ் முந்தினார்.

தற்போது இலங்கை அணி சார்பில் டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் மத்தியூஸ் ஐந்தா வது இடத்தில் உள்ளார்.

# தென்னாபிரிக்க கிரிக்கெட்டில் முத்திரை பதித்தார் ஸ்டெயின்!



தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்டெயின், புதிய சாதனை யொன்றை நிலை நாட்டி யுள்ளார்.

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக் காக, அதிக விக்கெட்டுக்கள் வீழ்த்திய வீரர் என்ற மகத்தான சாத னைக்கு ஸ்டெயின் தற்போது சொந்தக்காரர் ஆகி யுள்ளார்.

தென்னாபிரிக்காவின் செஞ்சூரியன் மைதானத் தில் நடைபெற்றுவரும் பாகிஸ்தான் அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியின்போது அவர் இந்தச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தென்னாபிரிக்கா அணி சார்பில், இதற்கு முன்னதாக வேகப்பந்து வீச்சா ளரான ஷோன் பொல்லாக் 108 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 421 விக்கெட் டுகள் வீழ்த்தியிருந்ததே சாதனையாக இருந்தது.

தற்போது 89ஆவது டெஸ்ட் போட்டியில் அடியெடுத்துள்ள ஸ்டெயின், அந்தச் சாதனையை முறிய டித்தது மட்டுமல்லாமல், மிக விரைவாக இந்தச் சாதனையை நிகழ்த்திய வீரராகவும் தன்னைப் பதிவுசெய் துக் கொண்டுள்ளார்.

இதற்கு அடுத்தபடியாக மக்காயா நிட்டினி 101 போட்டிகளில் 390 விக்கெட்டுகள் வீழ்த்தி மூன்றா வது இடத்தில் உள்ளார். அலென் டொனால்ட் 72 போட்டிகளில் 330 விக்கெட்டுகளை வீழ்த்தி நான்கா வது இடத்திலும், மோர்னி மோகல் 86 போட்டிகளில் 309 விக்கெட்டுகள் வீழ்த்தி ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

35 வயதாகும் தென்னாபிரிக்கா அணியின் தலை சிறந்த வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்டெயின், கடந்த மூன்றரை ஆண்டுகளில் காயத்தால் அவதிப் பட்டார். இதனால், அவரால் அணியில் தொடர்ச்சியாக இடம்பெறாத நிலை ஏற்பட்டது.

அத்தோடு, கடந்த ஜூலை மாதம் இலங்கையில் நடைபெற்ற டெஸ்டில் ஸ்டெயின் விளையாடினார். ஆனால் இரண்டு இன்னிங்ஸிலும் ஒரு விக்கெட் கூட அவரால் வீழ்த்த முடியவில்லை. இதனால் பொல்லாக் கின் சாதனையை அவரால் முறியடிக்க முடியாமல் இருந்தது.

இந்நிலையில் நீண்டதொரு போராட்டத்திற்கு பிறகு, சொந்த மண்ணில் இந்த சாதனையை புரிந்து இரசிகர்களை ஸ்டெயின் மகிழ்ச்சிப் படுத்தியுள்ளார்.


# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 14, ஆஸ்பத்திரி வீதி, ஆதன இல 743/4 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் E.E. நிக்கிலாம்பிள்ளை என்னும் பெயரில் ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், 205/3 ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த அருளப்பு அந்தோனிப் பிள்ளையும் பெண் சின்னம்மாவும் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 1989.09.18 ஆம் திகதியிட்டு 8018 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய சீதன உறுதியில் தங்களின் 1ம் பேரின் பெற்றார் மாதன் அருளப்புவும் பெண் சூசனும் 50 வருடங்களுக்கு மேலாக ஆட்சிசெய்து வந்ததாக வெளிப்படுத்தி தமது புத்திரி தவராசா பெண் சகாயதேவிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு ரி.எம். அந்தோனிப்பிள்ளை முகதாவில் 2005.11.07 ஆம் திகதி நிறைவேறிய அறுதி உறுதி மூலம் பூதர் தவராசாவும் பெண் சகாயதேவியும் நல்லூர், 70, நாயன்மார் வீதியைச் சேர்ந்த அட்சலிங்கம் பிரதீபனுக்கு குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்ததரிசு பா.தவபாலன் முகதாவில் 2008.08.28 ஆம் திகதியிட்டு 2652 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம், பிரதான வீதி, 14 1/1இல் வசிக்கும் அட்சலிங்கம் பிரதீபன் பெண் சந்தியாவும், பூதர் தவராசாவுக்கும் பெண் சகாயதேவிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு அ.இராசரட் ணம் முகதாவில் 2011.05.04 ஆம் திகதியிட்டு 7546 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நிபந்தனை அறுதி உறுதி மூலம் பூதர் தவராசாவும் பெண் சகாயதேவியும் பிரான்சிஸ் கிறிஸ்ரின் உதயகுமார் என்பவரும் நிபந்தனை அறுதியாக வழங்கியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு தி.கணதீபன் முகதாவில் 2017.03.06 ஆம் திகதியிட்டு 1054 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் 79/9இபுங்கன்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த பிரான்ஸிஸ் கிறிஸ்ரின் உதயகுமார் மற்றும் கிறிஸ்ரின் உதயகுமார் பெண் யூடிற்றா ஆகியோர் தவராசா மகள் சுஜேந்தினி என்பவருக்கு அறுதியாக விற்று ஆட்சியையும் ஒப்படைத்துள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 06.03.2017 திகதியிட்டு 1055 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் தவராசா மகள் கஜேந்தினிஇவடலியடைப்பு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த இராமலிங்கம் பிரபாகரன் என்பவருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு வி.ஜெயந்தா முகதாவில் 2018.01.22 ஆம் திகதியிட்டு 102 ஆம் இலக்கத்தில் நிறைவேறியஅறுதி உறுதி மூலம் இராசலிங்கம் பிரபாகரன்இ இராமலிங்க குருக்கள் சத்தியலிங்கக் குருக்களிற்கு அறுதியாக வழங்கியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 2018.06.13 ஆம் திகதியிட்டு 15180 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் இராசலிங்கம் பிரபாகரனும் பெண் கலைவாணியும், இராமலிங்கக்குருக்கள் சத்தியலிங்கக்குருக்கள் என்பவருக்கு அறுதியாக வழங்கி யுள்ளார்.

ஆதன விபரம்: – யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக்கோவிற்பற்று ’குளம் சிங்க ஆராட்சி வளவு’ இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் மு.கனகசபை அவர்களின் வரைபட இலக்கம் 7138/2017.11.08 இல் துண்டு – 1 எனக்காட்டப்பட்ட நில.பர.00 குளி 14.33 ஆகும்.

**கிழக்கு:-** செல்வராஜா பெண் றெஜினாவின் ஆதனம்.

**வடக்கு:-** இராசா சிவசாமி பெண் கமலாவின் ஆதனம்.

**மேற்கு:-** தெற்கேயுள்ள ஆஸ்பத்திரி வீதிக்கு செல்லும் ஒழுங்கை

**தெற்கு:-** மரியான் இராசாவின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை இராமலிங்க குருக்கள் சத்தியலிங்க குருக்கள் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது இராமலிங்கக்குருக் கள் சத்தியலிங்கக்குருக்கள் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

## ‘பிறவுண்ஸ் ஐஸ்’...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக இந்த பிறவுண் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

பண்டத்தரிப்பு வங்கிக் கிளை ஒன்றுக்கு அருகாமையில்வைத்து இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-07)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுக்களை ஏற்றுத் தமிழ் மக்களுக்குச் சேவை செய்யத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வராமைக்கான காரணத்தை தெரிவிக்கவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.டி.பி. கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

தற்போது வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம் அமைச்சுக்களை பிரதமரிடம் கொடுத்துள்ளார்கள். ஆனால் பிரதமருக்கும் எமது மக்களுக்குமான தொடர்பு என்ன ? அவரது கடந்த காலச் செயற்பாடு என்ன? இந்நிலையில் அந்த அமைச்சு தமிழ் மக்களது உணர்வுகளோடு தொடர்புபட்ட தரப்பினருக்கே வழங்கப்பட்டிருக்கவேண்டும்.

ஏன் இந்த அமைச்சைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெற்றிருக்கக் கூடாது ? அவ்வாறு அமைச்சைப் பெற்றுத் தமிழ் மக்களுக்கு அவர்கள் ஏன் சேவை செய்ய முன்வந்திருக்கக்கூடாது? அமைச்சர் மனோ கணேசன் கூறுவதுபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் அரசின் இணைந்து தமிழ் மக்களுக்குச் சேவை செய்யக்கூடாது ?

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இங்கே அரசுடன் கள்ளத் தொடர்பை வைத்திருக்கவும், தரகுச் செயற்பாட்டை மேற்கொள்ளவுமே விரும்புகின்றது.

தேர்தல் நேரத்தில் மக்களை உசுப்பேற்றுவதும், அவர்களது பிரச்சினையின்போது மௌனமாக இருப்பதுவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடாகவுள்ளது–என்றார்.

கே: உங்களையும் அமைச்சுப் பொறுப்பை ஏற்கக் கோரினார்கள் எனக் தெரிவிக்கப்படுகின்றதே ?

பதில்: தெற்கில் தேசிய அரசு ஒன்றை அமைக்கவேண்டிய தேவை உள்ளது. அதற்கு என்னையும் அழைத்தார்கள். ஆனால் நான் வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம் என்ற பழைய அமைச்சைத் தந்தால் வருகின்றேன், ஏனெனில் அந்த அமைச்சு ஊடாகவே வடக்கு மக்களுக்குச் சேவை செய்ய முடியும் எனக் கோரினேன். ஆனால் அந்த அமைச்சை எனக்கு வழங்குவது அவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்பதால் வேறொரு டீலுக்குக் கேட்டார்கள். நான் ஜனாதிபதியுடன் பேசிவிட்டு கூறுகின்றேன் எனத் தெரிவித்துள்ளேன்.

கேள்வி : வடக்கின் அபிவிருத்தியைச் செய்வதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற வேண்டிய அவசியம் என்ன ?

பதில் : ஜனாதிபதியின் சம்மதம் இன்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. யார் தலைகீழாக நின்றாலும் ஜனாதிபதியின் ஒத்துழைப்பு அவசியம். எனவே ஜனாதிபதி தற்போது நாட்டில் இல்லை. அவர் வந்தவுடன் அவருடன் பேசி அவர் சம்மதம் தெரிவித்தால் அமைச்சு பொறுப்பை ஏற்பேன். (ஐ-07)

## கூரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக, இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நாரஹேன்பிட்டி பொலிஸ் வைத்தியசாலையில் பணியாற்றும் 49 வயதுடைய பொலிஸ் அதிகாரியே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கொலைச் சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும், அவரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் ஜாஎல பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாய்த்துள்ளனர்.

நேற்றுக் காலை அனுராதபுரத்தில் இருந்து மதவாச்சி நோக்கிப் பயணித்த ரயிலில் பாய்ந்தே இந்த இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சிறுமி படுகாயங்களுடன் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

காதல் விவகாரம் தொடர்பில் இந்த இருவரும் உயிரை மாய்த்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினார்.

பொரளையில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் வீட்டில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தால், அதற்கு ஆதரவை வழங்குவோம்.

நாட்டை நேசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் தொடர்பான யோசனைக்கு ஆதரவாக வாக்களிப்பார்கள்.

எனவே குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்தலை நடத்தாது இழுத்தடிப்புச் செய்தால், ஏதாவது ஒரு வழிமுறையில் அரசைக் கைப்பற்றுவோம். அது நிச்சயம் நடக்கும். அதற்கு நாங்கள் தயாராகி வருகிறோம் – என்றார். (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடல் சுமார் ஒன்றரை மணிநேரத்துக்கு மேல் நீடித்தது எனவும், சந்திப்பு முடிவடைந்த கையோடு சபாநாயகர் வெளிநாடு பறந்துவிட்டார் எனவும் அறியமுடிகின்றது.

2019 ஆம் ஆண்டுக்குரிய நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் அவ்வாண்டில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் தேர்தல் உட்பட மேலும் சில முக் கிய விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதியுடன் முரண்படாமல் ஆட்சியை முன்னெடுக்குமாறு, ஐக்கிய தேசியக் கட்சி எம்.பிக்களுக்கு ஆலோசனை வழங்கும்படி சபாநாயகர் கேட்டுக்கொண்டுள்ளார் என்றும், இந்தக் கோரிக்கையை முன்வைப்பதற்காகவே பிரதமரை அவர் தனிப்பட்ட ரீதியில் சந்தித்தார் எனவும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

எனினும், ஜனாதிபதி நாட்டில் இல்லாத நிலையில் அதற்கு அடுத்தபடியாக உயர் பதவிகளை வகிக்கும் இருவரும் இரகசியமாக சந்தித்து பேச்சு நடத்தியுள்ளமையானது மைத்திரி தரப்பை பலகோணங்களில் சிந்திக்க வைத்துள்ளது. (ஐ)

## இடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மழை பெய்தால் நிலைமை இன்னும் மோசமாகும்.

நேற்று மாலை 6 மணி வரையான நிலைவரப்படி இடர் முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி –

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 322 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 286 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 176 பேர் இடர்பெயர்ந்து ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 542 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 755 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 512 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 713 பேர் இடம்பெயர்ந்து 10 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 82 வீடுகள் முழுமையாகவும் ஆயிரத்து 512 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 719 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 483 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 4 வீடுகள் முழுமையாகவும் 73 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 439 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 569 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெலிஓயா பிரதேச செயலர் பிரிவில் 8 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 9 ஆயிரத்து 733 குடும்பங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 166 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 789 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 501 பேர் 6 இடைத்தங்கல் முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 25 வீடுகள் முழுமையாகவும் 99 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 865 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 720 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 801 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 713 பேர் 9 தற்காலிக முகாங்களில் தொடர்ந்து தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் வெள்ளத்தால் 30 வீடுகள் முழுமையாகவும் 251 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 753 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 494 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 127 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 2 வீடுகள் முழுமையாகவும் 520 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பச்சிளைப்பளை பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 218 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 270 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 38 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 122 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மன்னார்நகர் பிரதேசசெயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

யாழ்ப்பாணம் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 257 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 642 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கியுள்ளனர். கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார். 2 தொழில் முயற்சிகள் அழிவடைந்துள்ளன.

வவுனியாவடக்கு பிரதேச செயலர் பிரிவில் 155 குடும்பங்களைச் சேர்ந்த 526 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 23 குடும்பங்களைச் சேர்ந்த 71 பேர் இரண்டு இடைத்தங்கல் முகாங்களில் தங்கியுள்ளனர். அத்துடன் பிரதேசத்தில் 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ஐ)

## கால்நடைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடர்களால் பெரியளவான பாதிப்புக்கள் உணரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் ஏற்பட்ட வெள்ளத்தால் 8 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் முற்றாக அழிவடைந்துள்ளது. 13 பாலங்கள் அழிவடைந்துள்ளன. 1281 மாடுகளும் 621 ஆடுகளும் உயிரிழந்துள்ளன என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் உயிரிழந்துள்ளன. இவ்வாறு உயிரிழந்த கால்நடைகளை அப்புறப்படுத்துவதற்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. எனினும் பொதுச் சுகாதாரம் கருதி அந்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன – என்றார்.

## தெஹிவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களை பதிவு செய்யுமாறு வலியுறுத்தி தெஹிவளை பொலிஸாரால் நேற்று விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் சிங்கள மொழியில் காணப்பட்டன. இதனையடுத்து தமிழ் மொழியிலான விண்ணப்பங்களை மக்கள் கோரியபோதிலும் தற்போதைக்கு ஒருமொழியிலேயே விண்ணப்பங்கள் காணப்படுவதாகவும் அதனைப் பூர்த்தி செய்து தருமாறும் பொலிஸார் பொறுப்பற்றுப் பதிலளித்துள்ளனர்.

தெஹிவளை பொலிஸாரின் இந்தச் செயற்பாட்டினால் தமிழ் மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். (ஐ)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வருடம் கடந்த மாதத்தில் மட்டும் 32 டெங்கு நோயாளிகள் கிளிநொச்சியில் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும், இது மாவட்டத்தில் கடந்தகாலங்களில் நவம்பர் மாதத்தில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கைகளுடன் ஒப்பிடுகையில் மிக அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் டெங்கு திடீர்ப் பெருக்கம் எதுவும் இல்லாத தற்போதைய காலப் பகுதியில் இதுவரை நாட்டில் இனங்காணப்பட்ட டெங்கு நோயாளர்களில் 0.65 வீதமான நோயாளர்கள் கிளிநொச்சியில் இனங்காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் இது மிக அதிகம் எனவும், 100,000 பேரில் 212 பேர் டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகும் சாத்தியம் தற்போது நிலவுவதாகவும் சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது.

தற்போது மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மழைக்காலநிலை டெங்கு நோய்ப் பரம்பலை அதிகரிக்கும் சாத்தியம் உள்ளதால் அனைத்துப் பொதுமக்களும் தமது வசிப்பிடங்கள், வேலைத்தளங்கள் , பொது இடங்கள் மற்றும் பாடசாலைகள் ஆகியவற்றைச் சுத்தமாகப் பேணி உயிர் கொல்லி டெங்குவில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் எனச் சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

கிளிநொச்சியில் கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவே அதிக டெங்கு அபாயம் நிலவும் பிரதேசமாக டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் இனங்காணப்பட்டுள்ளது. (ஐ)

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேசித்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவி வழங்கப்படாமை உட்பட மேலும் சில உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாததன் காரணமாகவே இத்தகையதொரு முடிவை எடுக்கவேண்டிய நிலைக்கு அக்கட்சி தள்ளப்பட்டுள்ளது.

அரசிலிருந்து வெளியேறுவது குறித்து கட்சிக்குள் கலந்துரையாடப்பட்டுவருகின்றது. விரைவில் தீர்மானம் எடுக்கப்படும். என்று மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

நாட்டில் அரசியல் குழப்பம் தலைதூக்கியிருந்தவேளை, மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிப்பது குறித்து மலையக மக்கள் முன்னணி ஆழமாக பரிசிலித்தது. அக்கட்சியின் தலைவரான இராதாகிருஷ்ணனும், அரவிந்தகுமார் எம்.பியும், மஹிந்தவை நேரில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

எனினும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஒருமித்த முடிவு, ஜனநாயகம் உட்பட மேலும் சில காரணிகளைக் கருத்திற்கொண்டு, ஐக்கிய தேசிய முன்னணியில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதற்கு ம.ம.மு. முடிவெடுத்தது.

புதிய அரசு அமைந்ததும் தனக்கு அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சுப் பதவியொன்று வழங்கப்படவேண்டும் என இராதா வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு ஆரம்பத்தில் பச்சைக்கொடி காட்டிய ஐக்கிய தேசியக்கட்சி, இறுதியில் இழுத்தடிப்பு செய்தது. இராதாகிருஷ்ணனுக்கு அமைச்சரவை அந்தஸ்த்து அல்லாத அமைச்சுப் பதவியொன்றும், அரவிந்தகுமார் எம்.பிக்கு பிரதியமைச்சுப் பதவியும் வழங்கப்படும் என கூறப்பட்டது.

தற்போது இராதாவுக்கு மட்டுமே பதவி வழங்கமுடியும் என கூறப்படுவதாலேயே ஐக்கிய தேசியக்கட்சிமீது மலையக மக்கள் முன்னணி கடும் அதிருப்தியடைந்து, அரசிலிருந்து வெளியேறுவது குறித்து பரிசிலித்து வருகின்றது.

அரசிலிருந்து வெளியேறினாலும் தமிழ் முற்போக்கு கூட்டணியுடனான உறவு பாதிக்காது. சுயாதீன அணியாக நாடாளுமன்றத்தில் எமது கட்சி எம்.பிக்கள் இருவரும் செயற்படுவார்கள். என்று ம.ம.முவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அதேவேளை, மலையக மக்கள் முன்னணியை சமரசப்படுத்தும் முயற்சியில் ஆளுங்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் களமிறங்கியுள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# உடைக்கப்பட்ட புத்தர் சிலையை முஸ்லிம்களே சீரமைக்கவேண்டும்

## மரிக்கார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 28

மாவனல்லைப் பகுதியில் உடைத்துச் சேதமாக்கப்பட்ட புத்தர் சிலைகளை முஸ்லிம் மக்களே புனரமைத்துக் கொடுக்கவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்கள் பிற இனத்தவர்களுடன் ஒத்துழைப்புடன் வாழ விரும்புபவர்கள் என்ற அடிப்படையில் நல்லெண்ண அடிப்படையில் தம்மைக் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் இதனை நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

புனரமைப்புப் பணிகளில் தனது பங்களிப்பை வழங்க எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்த அவர், சிலை உடைப்பு தொடர்பான விசாரணைகளைத் தடுப்பதற்குத் தான் தலையீடு செய்கிறார் என முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை முழுமையாக மறுத்துள்ளார்.

அத்துடன், தன் மீது அவதூறுச் செய்திகளை வெளியிட்டு வருபவர்களுக்கும், சிலை உடைப்பு விவகாரத்துடன் தொடர்புடையவர்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரைத் தாம் கோரியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# கற்பித்த ஆசிரியரின் வீட்டிலேயே கைவரிசை காட்டிய மாணவர்கள்!

## யாழ். பொலிஸாரினால் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 28

ஆசிரியரின் வீட்டில் திருடினார்கள் என்ற குற்றச்சாட்டில் பிரபல பாடசாலை மாணவர்கள் நான்கு பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். நகரப் பகுதியில் உள்ள மிகப் பிரபலமான பாடசாலையில் கல்வி பயிலும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் நால்வரே நேற்றுமுன்தினம் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.கச்சேரி – நல்லூர் வீதியில் வசிக்கும் ஆசிரியர், இந்த மாணவர்களில் ஒருவருக்குக் கற்பித்துள்ளார். இந்த மாணவர் அந்த ஆசிரியரின் வீட்டுக்குத் தினமும் சென்று வந்துள்ளார். இவ்வாறு சென்று வந்த அவர் பல தடவைகள் வீட்டில் இருந்த மடிக் கணினி மற்றும் தொலைபேசி, பணம் உள்ளிட்ட பெறுமதி மிக்க பொருள்களை திருடியுள்ளார்.

இந்தத் திருட்டுகளை யார் செய்தது என்று அறியாத, ஆசிரியர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். கடந்த மூன்று வாரங்களுக்கு முன்பு வங்கி ஏ.ரி.எம். அட்டையைத் திருடிச் சென்றமையுடன், இரண்டு வாரங்களுக்குள் புட் சிற்றி ஒன்றில் பொருட்களையும் கொள்வனவு செய்துள்ளனர்.

ஏ.ரி.எம். திருடப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் இந்த மாணவன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்துள்ளார். தனது நண்பர்களுடன் யாழ். நகரில் உள்ள விருந்தினர் விடுதிக்குச் சென்று அங்கு மதுபானம் அருந்தி உணவுகள் உட்கொண்டு பெரும் ஆரவாரமாக இருந்ததுடன் புகைப்படங்களும் எடுத்துள்ளார். இந்தத் தகவலை அறிந்த யாழ்ப்பாணம் பொலிஸார் அவர்களைப் பின் தொடர்ந்து, வீட்டுக்குச் சென்று அவர்களது வீட்டில் வைத்து நால்வரையும் கைது செய் துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நால்வரிடமும் யாழ்.பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஐ)

# குகவரதனுக்குப் பிணை

கொழும்பு, டிசெ. 28

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்ட மேல் மாகாணசபை உறுப்பினர் சண். குகவரதன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரைப் பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

தலா இரண்டரைக் கோடி ரூபா சரீரப் பிணையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

காசோலை மோசடிக் குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் நேற்றுக் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ்.மாநகரை பசுமையாக்கும் செயற்திட்டம் நேற்று ஆரம்பம்

யாழ் மாநகரை பசுமைப்படுத்தும் செயற்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாநகர மைதான வளாகத்தை அண்மித்த பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்த நிழ்வில் வடக்கு மாகாண ஆளுனர் ரெஜினோல்ட் குரே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டி இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

நேற்று யாழ் மாநகர மைதான வளாக பிரதான வீதி மற்றும் யாழ். துரையப்பா மைதானத்துக்கு அருகே செல்லும் பண்ணை வீதி ஆகியவற்றில் நான்கு கிலோ மீற்றர் தூரத்திற்கு இரு மருங்கிலும் நிழல் மரங்கள் நாட்டி வைக்கப்பட்டன.

யாழ். மாநகர துணை மேயர் ஈசன், ஆளுனரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாநகர ஆணையாளர் ஜெயசீலன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் மற்றும் மாவட்ட மேலதிக அரச அதிபர், இராணுவத்தினர், திணைக்களங்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிழ்வில் கலந்துகொண்டனர்.



இந்த நிகழ்வில் கருத்து வெளியிட்ட ஆளுநர், யாழ் மாநகரை பசுமையான நகரமாக மாற்றும் செயற்பாடுகளையே தற்போது முன்னெடுத்து வருவதாகவும், அடுத்த வருடத்திற்குள் மாநகரம் பசுமையான நகரமாக மாற்றமடையுமெனவும் கூறினார். (ஐ -07)

# மதுபானச்சாலையை அகற்று!

## பருத்தித்துறையில் போராட்டம்



பருத்தித்துறைநகரசபைஎல்லைக்குள் உள்ள மதுபானச்சாலையின் அனுமதியை இரத்துச்செய்யக் கோரி அப்பகுதி பொதுமக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை காலை பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் உள்ள மதுபானச் சாலை வியாபார உரிமையோ, கட்டட உரிமையோ இல்லாமல் சட்டவிரோதமான முறையில் மதவழிபாட்டு இடங்களுக்கும், பாடசாலைக்கும் அருகில் இயங்கி வருவதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனை அகற்றக் கோரி கடந்த மே மாதம் 8 ஆம் திகதியும், ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதியும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தின் முடிவில் பருத்தித் துறை நகர சபை தவிசாளருக்கு, அந்தச் மதுபானச்சாலைக்கான 2019 ஆம் ஆண்டு அனுமதியை வழங்கக்கூடாது என்றும், நிரந்தரமாக அங்கிருந்து மதுபானச்சாலையை அகற்றுமாறும் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

நகர சபை அமர்வில் அனைத்து உறுப்பினர்களும் இந்த மதுபானச் சாலை தொடர்ந்து இயங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தனர்.

இருப்பினும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதனாலேயே நேற்று இந்தப் போராட்டத்தை முன்னெடுத்ததாகப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (ஐ - 07)

# சிலை உடைத்தோருக்குத் தண்டனை இல்லையேல் இனமோதல் ஏற்படும்

## ஜனாதிபதிக்கு பௌத்த அமைப்பு கடிதம்

கொழும்பு, டிசெ. 28

மாவனல்லை புத்தர் சிலையைச் சேதப்படுத்தியவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்குமாறு வேண்டி ஹெல பொது சவிய அமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் புதுகல ஜினவங்ச தேரர் இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு: –

மாவனல்லைப் பிரதேசத்தில் புத்தர் சிலையை உடைப்பதற்கு முயற்சித்த சம்பவம் தொடர்பில் ஒருவர் பொலிஸில் பிடித்துக் கொடுக்கப்பட்டார் எனச் செய்தி ஊடகங்கள் மூலம் அறியக் கிடைத்தது. இந்த இளைஞனை விடுவிப்பதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக அப்பிரதேச வாசிகளும், அப்பிரதேச பௌத்த தேரர்களும் எம்மிடம் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

நாட்டில் சகவாழ்வும், நல்லிணக்கமும் ஏற்படுத்தப்படவேண்டிய தேவை உணரப்படும் கால கட்டத்திலும், அண்மைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிகழ்வுகள் என்பவற்றையும் கருத்தில் கொண்டு பொறுப்பு மிக்க சட்டம், ஒழுங்கு அமைச்சுப் பதவியிலுள்ள தாங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும்.

சிறு குழுவொன்று முன்னெடுக்கும் நடவடிக்கையால், முழு நாட்டு இனத்தவர்கள் மத்தியிலும் மத ரீதியில் மோதல்கள் ஏற்பட வாய்ப்பு காணப்படுகின்றது. இதற்குச் சில வருடங்களுக்கு முன்னரும் மாவனல்லைப் பிரதேசத்தில் இதுபோன்ற அசம்பாவிதங்கள் இடம்பெற்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துகின்றோம்.

இதன்போது, புத்தர் சிலை மாத்திரமன்றி, உயிர் ஒன்றையும் இழக்க வேண்டி ஏற்பட்டது. இந்தப் புத்தர் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது முஸ்லிம் இளைஞர் ஒருவரினால் என்பது முக்கிய விடயமாகும்.

நாட்டின் சட்டத்தை மீறுவோருக்கு வழங்கப்படும் தண்டனை இதன்பிறகு அது போன்ற செயல்களில் ஈடுபடத் தூண்டாதவாறு இருக்கவேண்டும்.

புத்தர் சிலை உடைப்பு நடவடிக்கை ஒரு நபரினதோ, பல நபர்களினதோ நடவடிக்கையாகவுள்ளது. இது சமூகத்துக்குள் ஏதோ ஒரு வகையில் இனங்களுக்கிடையில் மோதல் ஒன்று உருவாவதற்கு வழியமைக்கும்.

இதனைத் தடுப்பதற்கு, சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்குத் தாங்களும், தங்களது பாதுகாப்புப் பிரிவும் உடன் நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகிறோம் – என்றுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.